www.surabooks.com

சுராவின்



# பொருளியல்

## 12 ஆம் வகுப்பு

**புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.**

### சிறப்பம்சங்கள்

- பாடப்பகுதியில் உள்ள **அனைத்து வினாக்களுக்கும் விடைகள்** தரப்பட்டுள்ளன.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் **கூடுதல் வினாக்கள்** விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- கொள்குறி (Objective) வகையிலான **1 மதிப்பெண் வினாக்கள்** கீழ்க்கண்ட தலைப்புகளில் தரப்பட்டுள்ளன.
  1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்
  2. பொருத்துதல்
  3. கோடிட்ட இடத்தை நிரப்புதல்
  4. பொருந்தாததை கண்டறிதல்
  5. கூற்று மற்றும் காரணம்
  6. சரியான கூற்றைக் கண்டறிதல்
- அரசு மாதிரி வினாத்தாள் – 2019 *[Govt. MQP-'19]*, காலாண்டுத் தேர்வு – 2019 & 2023 *[QY-'19 & '23]*, அரையாண்டுத் தேர்வு – 2019 & 2023 *[HY-'19 & '23]*, அரசு பொதுத் தேர்வு மார்ச் – 2020, மே – 2022, மார்ச் – 2023 & மார்ச் – 2024 *[Mar-2020, May-'22 , Mar - '23 & '24]*, அரசு துணைத்தேர்வு செப். – 2020 & ஆகஸ்ட் – 2021 *[Sep-2020 & Aug-'21]*, முதல் மற்றும் இரண்டாம் திருப்புதல் தேர்வு 2022 *[FRT & SRT -'22]*, மற்றும் உடனடித் தேர்வு ஜூலை 2022 & ஜூன் – 2023 *[July-'22 & June-'23]* வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- மாதிரி வினாத்தாள்கள் 1 முதல் 6 வரை (*PTA*) வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரசு பொதுத்தேர்வு மார்ச் 2024 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 78718 02000/ 98409 26027

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

www.surabooks.com

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : SG 109

எழுதி வழங்கியவர்

A. முகமது, M.A., M.Phil., B.Ed. சென்னை
M. ரஹிமா ஆயிஷா, M.Com., M.Phil., நாமக்கல்
L. சோமசுந்தரம், M.A., M.Ed., M.Phil., கோயம்புத்தூர்

திருத்தியவர்

T. சாந்தி, M.A., B.Ed., திருச்சி
A. வேல்முருகன், M.A., B.Ed., சேலம்

மதிப்பாளர்

Dr. M. முனிரத்தினம், M.A., M.Phil., Ph.D., சென்னை

**Our Guides for XI & XII Standard**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

# பதிப்பாசிரியர் உரை

12ம் வகுப்பிற்கான சுராவின் **பொருளியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். பொருளியல் பாடங்களுக்கான வினா விடைகள் /பயிற்சிகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் பொருளியல் வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

நமது சுராவின் பொருளியல் வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், பொருளியல் பாடத்தை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
- பதிப்பகத்தார்

*வாழ்த்துக்கள் !!!*

**தலைமை அலுவலகம்**

**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phones :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**e-mail :** orders@surabooks.com
**website :** www.surabooks.com

**For Orders Contact**

80562 94222
81242 01000
81243 01000
96001 75757
78718 02000
98409 26027

16/03/2024

# பொருளடக்கம்


| இயல் எண் | பாடத் தலைப்புகள் | பக்கம் | மாதம் |
|---|---|---|---|
| 1. | பேரியல் பொருளாதாரம் | 1 - 20 | ஜூன் |
| 2. | நாட்டு வருமானம் | 21 - 44 | |
| 3. | வேலைவாய்ப்பும் வருமான கோட்பாடுகளும் | 45 - 60 | |
| 4. | நுகர்வு சார்பும் முதலீடு சார்பும் | 61 - 82 | ஜூலை |
| 5. | பணவியல் பொருளியல் | 83 - 102 | |
| முதல் இடைப் பருவம் 1 முதல் 5 பாடங்கள் முடிய (ஜூன், ஜூலை) | | | |
| 6. | வங்கியியல் | 103 - 122 | ஆகஸ்ட் |
| 7. | பன்னாட்டுப் பொருளியல் | 123 - 146 | |
| 8. | பன்னாட்டுப் பொருளாதார அமைப்புகள் | 147 - 164 | செப்டம்பர் |
| காலாண்டுத் தேர்வு 1 முதல் 8 பாடங்கள் முடிய (ஜூன் - செப்டம்பர்) | | | |
| 9. | நிதிப் பொருளியல் | 165 - 186 | அக்டோபர் |
| 10. | சுற்றுச்சூழல் பொருளியல் | 187 - 206 | |
| 11. | பொருளாதார மேம்பாடும் திட்டமிடலும் | 207 - 226 | நவம்பர் |
| இரண்டாம் இடைப் பருவம் 9 முதல் 11 பாடங்கள் முடிய (அக்டோபர், நவம்பர்) | | | |
| 12. | புள்ளியியல் முறைகளும் பொருளாதார அளவையியலும் ஓர் அறிமுகம் | 227 - 252 | நவம்பர் |
| அரையாண்டுத் தேர்வு (மொத்த பாடங்கள்) | | | |
| அரசு பொதுத் தேர்வு 2024 வினாத்தாள் விடைகளுடன் | | 253 - 268 | |




enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

## TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **36550290536**<br>Bank Name : **STATE BANK OF INDIA**<br>Bank Branch : Padi<br>IFSC : SBIN0005083 | A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **21000210001240**<br>Bank Name : **UCO BANK**<br>Bank Branch : Anna Nagar West<br>IFSC : UCBA0002100 |
| A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **6502699356**<br>Bank Name : **INDIAN BANK**<br>Bank Branch : Asiad Colony<br>IFSC : IDIB000A098 | A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **1154135000017684**<br>Bank Name : **KVB BANK**<br>Bank Branch : Anna Nagar<br>IFSC : KVBL0001154 |
| A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **13240200032412**<br>Bank Name : **FEDERAL BANK**<br>Bank Branch : Anna Nagar<br>IFSC : FDRL0001324 | A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **50200031530945**<br>Bank Name : **HDFC BANK**<br>Bank Branch : Cenotaph Road, Teynampet<br>IFSC : HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

**For Google Pay : 98409 26027** **For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phones : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com





www.surabooks.com

இயல்

# 1 பேரியல் பொருளாதாரம்

## பொருளடக்கம்


1.1 அறிமுகம்

1.2 பேரியல் பொருளாதாரத்தின் பொருள்

1.3 பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்

1.4 பேரியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லை

1.5 குறைகள்

1.6 பொருளாதாரமும் அதன் வகைகளும்

1.7 பொருளாதார முறைகள்

1.7.1 முதலாளித்துவப் பொருளாதாரம் (முதலாளித்துவம்)

1.7.2 சமதருமப் பொருளாதாரம்

1.7.3 கலப்புப் பொருளாதாரம்

1.8 பேரியல் பொருளாதாரக் கருத்துகள்

1.8.1 இருப்பு, தடைபடா ஓட்ட மாறிகள்

1.8.2 பொருளாதார மாதிரிகள்

1.9 வருமான சுழல் ஓட்டம்

1.9.1 இரு துறைப் பொருளாதாரத்தின் வருமான சுழல் ஓட்டம்

1.9.2 மூன்று துறைப் பொருளாதாரத்தின் வருமான சுழல் ஓட்டம்


1.9.3 நான்கு துறைப் பொருளாதாரத்தில் வருமான சுழல் ஓட்டம்


www.surabooks.com



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

## கருத்துப் படம்




## முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **பணவீக்கம்** | : | பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும். |
| **வணிக சுழற்சி** | : | பொதுவாக எல்லா நாடுகளும் வணிக ஏற்றத்தாழ்வு மற்றும் வணிக சுழற்சியால் ஏற்படும் சிக்கல்களை சந்திக்கின்றது. |
| **பேரியல் பொருளாதாரத்தின் பொருள்** | : | பேரியல் பொருளாதாரம் என்பது ஒரு பொருளாதார அமைப்பு முழுமையையும் படிப்பது ஆகும். |
| **பொருளாதார முறைகள்** | : | பொருளாதார முறை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மக்களையும் நிறுவனங்களையும் ஒருங்கிணைத்துப் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகும். |

www.surabooks.com

| | | |
|---|---|---|
| **முதலாளித்துவ பொருளாதாரம்** | : | முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும் பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இலாப நோக்கத்தை முதன்மையாகக் கொண்டிருக்கும். |
| **தெரிந்தெடுப்பதில் சுதந்திரம்** | : | ஒவ்வொரு தனிமனிதரும் தங்களது வேலையைத் தேர்ந்தெடுப்பதிலும், உற்பத்தி செய்யும் பண்டங்களைத் தேர்ந்தெடுப்பதிலும், வியாபார இடத்தை தெரிவு செய்வதிலும் முழு சுதந்திரம் பெற்றிருப்பர். |
| **இலாப நோக்கம்** | : | முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளிலும் இலாபம் பெறுவதே உந்து விசையாகக் காணப்படும். |
| **விலை இயங்குதல் முறை** | : | விலை இயங்கு முறையானது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இதயமாகும். |
| **தானாக இயங்குதல்** | : | முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அரசின் எந்தத் தலையீடும் இல்லாமல் பொருளாதாரம் தானாகவே செயல்படும். |
| **சமதருமப் பொருளாதாரம்** | : | சமதருமம் என்பது மொத்த திட்டமிடுதல், பொது உடமை, பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் கட்டுப்பாடு ஆகிய முறைகளைக் குறிப்பிடுவதாகும். |
| **போட்டி இல்லாமை** | : | சமதருமப் பொருளாதார அமைப்பு முறையில் போட்டி இல்லாத அங்காடி காணப்படும். பண்டங்கள், பணிகளின் உற்பத்தியையும், பகிர்வையும் அரசே முற்றிலும் கட்டுப்படுத்துகிறது. |
| **இருப்பு** | : | இருப்பு என்பவை ஒரு குறிப்பிட்ட காலத்தில் கணக்கிடப்படும் பண்டங்களின் அளவினைக் குறிப்பதாகும். |
| **தடைபடா ஓட்ட மாறிகள்** | : | தடைபடா ஓட்ட மாறிகள் என்பவை ஒரு குறிப்பிட்டக் காலகட்ட அளவில் கணக்கிடப்படுபவையாகும். |
| **வருமான சுழல் ஓட்டம்** | : | ஒரு பொருளாதாரத்தின் வருமான சுழல் ஓட்ட மாதிரியானது, அந்தப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும். |
| **இல்லத்துறை** | : | இல்லத்துறைதான், பண்டங்கள், பணிகளை வாங்கும் ஒரே துறையும், நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகளை அளிக்கும் ஒரே துறையும் ஆகும். |
| **பொருளாதாரம்** | : | ஒரு குறிப்பிட்ட இடத்தில் மக்களையும், நிறுவனங்களையும் ஒருங்கிணைத்துப் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகும். |
| **கலப்புப் பொருளாதாரம்** | : | கலப்புப் பொருளாதார முறையில், தனியார் துறைகளும், பொதுத்துறைகளும் இணைந்து பொருளாதார மேம்பாட்டிற்காகப் பணியாற்றும். |
| **உலகத்துவம்** | : | ஒவ்வொரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளும் மற்ற நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டும், சார்ந்தும் இருப்பதும் உலகத்துவம் ஆகும். |

## இலக்கணங்கள்

| | | |
|---|---|---|
| **டான் புஸ், பிஸ்சார், ஸ்டார்டிஸின் பேரியல் பொருளாதார இலக்கணம்** | : | பேரியல் பொருளாதாரம் என்பது உண்மைகள் மற்றும் கோட்பாடுகளை ஒருங்கிணைப்பது பற்றியதே என்கின்றனர். |
| **ஏ.ஜே. பிரவுனின் பொருளாதார அமைப்பு இலக்கணம்** | : | ஏ.ஜே. பிரவுண் என்பவர், "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது" ஆகும். |
| **ஜே. ஆர். ஹிக்ஸின் பொருளாதார அமைப்பு இலக்கணம்** | : | ஜே. ஆர். ஹிக்ஸ் "நுகர்வோரின் விருப்பங்களை நிறைவு செய்வதற்கானப் பொருட்களையும் பணிகளையும் தயாரிக்கும் உற்பத்தியாளர், பணியாளர்களுக்கிடையே உள்ள கூட்டுறவே பொருளாதார அமைப்பு" எனக் கூறுகிறார். |

www.surabooks.com

| | | |
|---|---|---|
| **மேன்பிரட்டிஸ்டீகரின் உலகத்துவ வரைவிலக்கணம்** | : | "பன்னாட்டு வணிகத்தால் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தை எதிர் நோக்கும் உலகமயமாக்குதல் என்ற புதிய அங்காடி தத்துவத்தை குறிப்பிடுவது உலகத்துவம் என்ற மேன்பிரட்டிஸ்டீகர் கூறுகிறார்." |
| **சமதருமப் பொருளாதாரம் இலக்கணம்** | : | கார்ல் மார்க்ஸ் சமதருமத்தின் தந்தை ஆவார். "சமதருமம் என்பது மொத்த திட்டமிடுதல், பொது உடைமை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் கட்டுப்பாடு ஆகிய முறைகளை குறிப்பிடுவதாகும்." |
| **முதலாளித்துவத்தின் இலக்கணம்** | : | "முதலாளித்துவம்" என்பது, மூலதனத்தின் உரிமையாளர் என்ற "முதலாளித்துவ" காலத்திற்கு முன்னதாகவே தோன்றியது ஆகும். |
| **கலப்புப் பொருளாதாரத்தின் இலக்கணம்** | : | கலப்புப் பொருளாதார முறையில், தனியார் துறைகளும், பொதுத்துறைகளும் இணைந்து பொருளாதார மேம்பாட்டிற்காகப் பணியாற்றும் இம்முறை முதலாளித்துவம், சமதருமம் ஆகியவற்றின் கலவையாகும். |
| **வருமான சுழல் ஓட்டம்** | : | இது பொருளாதார முகவர்களாகிய நிறுவனம், குடியிருப்பு, அரசாங்கம் மற்றும் நாடுகளிடையே வருமானம், பண்டங்கள், பணிகள், உற்பத்திக் காரணிகளின் ஓட்டத்தை காண்பிப்பதாகும். |

## சூத்திரங்கள்

- ✦ இரு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டச் சமன்பாடு $Y = C + I$
- ✦ மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டச் சமன்பாடு $Y = C + I + G$
- ✦ நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டச் சமன்பாடு $Y = C + I + G + (X - M)$

## புத்தக வினாக்கள் மற்றும் விடைகள்

### மாதிரி வினாக்கள் - பகுதி - அ

**சரியான விடையை தெரிவு செய்க :**

**1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை** *[PTA-6; FRT & May-'22]*

அ) சொத்தும் நலமும் ஆ) உற்பத்தியும் நுகர்வு
இ) தேவையும் அளிப்பும் ஈ) நுண்ணியலும் பேரியலும்

**விடை ஈ) நுண்ணியலும் பேரியலும்**

**2. "மேக்ரோ" (Macro) என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் யார்?** *[QY-'19]*

அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே. எம். கீன்சு
இ) ராக்னர் பிரிக்சு ஈ) காரல் மார்க்சு

**விடை இ) ராக்னர் பிரிக்சு**

**3. "புதிய பேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?** *[Govt. MQP -'19; Mar-2020 & '24; Sep-2020; FRT-'22]*

அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே. எம். கீன்சு
இ) ராக்னர் பிரிக்சு ஈ) காரல் மார்க்சு

**விடை ஆ) ஜே. எம். கீன்சு**

**4. பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது?** *[PTA-1; FRT & July-'22; Mar & HY - '23]*

அ) விலை கோட்பாடு ஆ) வருவாய் கோட்பாடு
இ) அங்காடி கோட்பாடு ஈ) நுண்ணியல் கோட்பாடு

**விடை ஆ) வருவாய் கோட்பாடு**

www.surabooks.com

**5. பேரியல் பொருளாதாரம் ஆய்வது** *[PTA-2; Mar-2020; QY-'23]*
அ) தனிமனிதர்களை ஆ) நிறுவனங்களை
இ) நாடுகளை
ஈ) ஒட்டுமொத்தங்களை
**விடை ஈ) ஒட்டுமொத்தங்களை**

**6. ஜே. எம். கீன்சின் பங்களிப்பைக் குறிப்பிடுக.**
அ) நாடுகளின் செல்வம் *[May-'22]*
ஆ) பொதுக் கோட்பாடு
இ) மூலதனம்
ஈ) பொது நிதி **விடை ஆ) பொதுக் கோட்பாடு**

**7. பொது மட்டத்தில் விலையின் தொடர் உயர்வைக் குறிப்பிடும் கருத்து _______ ஆகும்.**
அ) மொத்த விலைக் குறியீடு
ஆ) வணிகச் சுழல்
இ) பண வீக்கம்
ஈ) நாட்டு வருமானம் **விடை இ) பண வீக்கம்**

**8. பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக.** *[PTA-5]*
அ) அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது
ஆ) தடைகளை முறியடிப்பது
இ) வளர்ச்சியை அடைவது
ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்
**விடை ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்**

**9. ஒரு பொருளாதாரத்தின் அடிப்படைப் பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**
அ) உற்பத்தியும் பகிர்வும்
ஆ) உற்பத்தியும் பரிமாற்றமும்
இ) உற்பத்தியும் நுகர்வும்
ஈ) உற்பத்தியும் சந்தையிடுகையும்
**விடை இ) உற்பத்தியும் நுகர்வும்**

**10. ஒரு பொருளாதாரத்தில் காணப்படுவது.**
அ) உற்பத்தி துறை *[HY-'19; QY-'23; PTA-4]*
ஆ) நுகர்வு துறை
இ) அரசு துறை
ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்
**விடை ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்**

**11. எந்த பொருளாதாரத்தில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?** *[Mar-'24]*
அ) முதலாளித்துவப் பொருளாதாரம்
ஆ) சமதருமப் பொருளாதாரம்
இ) உலகமய அமைப்பு
ஈ) கலப்புப் பொருளாதாரம்
**விடை அ) முதலாளித்துவப் பொருளாதாரம்**

**12. பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு _______ ஆகும்.**
அ) முதலாளித்துவப் பொருளாதாரம்
ஆ) உலகமயத்துவ அமைப்பு
இ) கலப்புப் பொருளாதாரம்
ஈ) சமதருமப் பொருளாதாரம்
**விடை ஈ) சமதருமப் பொருளாதாரம்**

**13. முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப் படுபவர் யார்?** *[FRT-'22]*
அ) ஆடம்ஸ்மித் ஆ) காரல் மார்க்ஸ்
இ) தக்கேரி ஈ) ஜே.எம். கீன்ஸ்
**விடை அ) ஆடம்ஸ்மித்**

**14. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு _______ ஆகும்.** *[PTA-3; Aug-'21; Mar & QY- '23]*
அ) இரஷ்யா ஆ) அமெரிக்கா
இ) இந்தியா ஈ) சீனா
**விடை ஆ) அமெரிக்கா**

**15. சமதருமக் கொள்கையின் தந்தை எனப்படுபவர் யார்?** *[HY-'19 & '23; PTA-1; Aug-'21; June-'23]*
அ) ஜே.எம். கீன்சு ஆ) காரல் மார்க்சு
இ) ஆடம்ஸ்மித் ஈ) சாமுவேல்சன்
**விடை ஆ) காரல் மார்க்சு**

**16. தனியாரும் அரசும் சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பைக் குறிப்பிடும் பதம் _______ ஆகும்.** *[PTA-6; July-'22]*
அ) முதலாளித்துவப் பொருளாதாரம்
ஆ) சமதருமப் பொருளாதாரம்
இ) உலகமயத்துவ பொருளாதாரம்
ஈ) கலப்புப் பொருளாதாரம்
**விடை ஈ) கலப்புப் பொருளாதாரம்**

**17. ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவைக் குறிப்பிடும் பதம் _______ ஆகும்.**
அ) உற்பத்தி ஆ) இருப்பு
இ) மாறிலி ஈ) ஓட்டம்
**விடை ஆ) இருப்பு**

**18. கீழ்வருவனவற்றுள் தடைபடா ஓட்ட மாறிலியைக் கண்டுபிடி.**
அ) பண அளிப்பு *[QY-'19; Sep-2020]*
ஆ) சொத்துக்கள்
இ) வருமானம்
ஈ) வெளிநாட்டுச் செலாவணி இருப்பு
**விடை இ) வருமானம்**

www.surabooks.com

**19. இருதுறை மாதிரியில் உள்ள இருதுறைகளைக் குறிப்பிடுக.** *[PTA-4; FRT-'22]*

அ) குடும்பங்களும் நிறுவனங்களும்

ஆ) தனியாரும் பொதுத்துறையும்

இ) உள்நாட்டு, வெளிநாட்டுத் துறைகள்

ஈ) நிறுவனங்களும் அரசும்

விடை **அ) குடும்பங்களும் நிறுவனங்களும்**

**20. திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் சுழல் ஓட்ட மாதிரி என்பது _______ ஆகும்.** *[PTA-2]*

அ) இரு துறை மாதிரி

ஆ) முத்துறை மாதிரி

இ) நான்கு துறை மாதிரி

ஈ) மேல் சொல்லப்பட்ட அனைத்தும்

விடை **இ) நான்கு துறை மாதிரி**

## பகுதி - ஆ

## கீழ்க்காண்பவற்றுக்கு ஓரிரு சொற்களில் விடையளி

**21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.** *[QY-'19; PTA-4; FRT & May-'22]*

**விடை.** பேரியல் பொருளாதாரம் என்பது ஒட்டு மொத்தங்களாகிய நாட்டு வருமானம், வேலைவாய்ப்பு -நாட்டு உற்பத்தி முதலானவற்றை உள்ளடக்கியது. 'பேரியல் பொருளாதாரத்தை வருவாய்க் கோட்பாடு' எனவும் அழைப்பர்.

**22. பணவீக்கம் எனும் பதத்தின் பொருள் தருக.** *[Govt. MQP -'19; QY-'19; Mar-2020; July-'22]*

**விடை.** பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.

**23. "பொருளாதாரம்" என்பதன் பொருள் யாது?** *[HY-'19; PTA-1, 5]*

**விடை.** பொருளாதாரம் என்கிற கருத்தினை ஏ.ஜே. பிரவுண் என்பவர் "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது என்று வரையறுத்துள்ளார்."

(அல்லது)

"நுகர்வோரின் விருப்பங்களை நிறைவு செய்வதற்கானப் பொருள்களையும், பணிகளையும் தயாரிக்கும் உற்பத்தியாளர், பணியாளர்களுக்கிடையே உள்ள கூட்டுறவே பொருளாதார அமைப்பு" என ஜே.ஆர். ஹிக்ஸ் (J.R. Hicks) கூறுகிறார்.

**24. வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.** *[June-'23]*

**விடை.** வளர்ச்சி நிலை 4 வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

- வளர்ந்த பொருளாதாரம்
- வளர்ச்சி குன்றிய பொருளாதாரம்
- வளராத பொருளாதாரம்
- வளரும் பொருளாதாரம்

**25. முதலாளித்துவம் என்றால் என்ன?** *[HY-'19; FRT-'22; Mar-'24]*

**விடை.**
- முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தந்தை ஆடம் ஸ்மித் ஆவார்.
- முதலாளித்துவப் பொருளாதாரம் தடையில்லாப் பொருளாதாரம் மற்றும் அங்காடிப் பொருளாதாரம் எனவும் அழைக்கப்படுகிறது.
- இங்கு பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்.
- முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும். பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இலாப நோக்கத்தை முதன்மையாகக் கொண்டிருக்கும்.

**26. பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.** *[Mar & HY- '23]*

**விடை.**
- மாதிரி என்பது உண்மை சூழலை எளிமையாக பிரதிபலிப்பது ஆகும்.
- பொருளாதார வல்லுநர்கள், பொருளாதார நடவடிக்கைகள், அவற்றுக்கிடையேயான உறவுகள், நடத்தைகள் பற்றி விவரிப்பதற்கு மாதிரிகளைப் பயன்படுத்துகின்றனர்.
- மாதிரி என்பது பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது.

**27. "வருமான சுழல் ஓட்டம்" - வரையறு.** *[PTA-2; QY-'23]*

**விடை.**
- ஒரு பொருளாதாரத்தின் வருமான சுழல் ஓட்ட மாதிரியானது, அந்தப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும்.
- இது பொருளாதார முகவர்களாகிய நிறுவனம், குடியிருப்பு, அரசாங்கம் மற்றும் நாடுகளிடையே வருமானம், பண்டங்கள், பணிகள், உற்பத்திக் காரணிகளின் ஓட்டத்தை காண்பிப்பதாகும்.

## பகுதி - இ

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக :**

**28. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.** *[PTA-5; Mar-2020; FRT-'22; June-'23]*

விடை. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவங்கள்:

- ஒரு பொருளாதார அமைப்பின் ஒட்டு மொத்த செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளவும், அதற்குத் தேவையான சரியான யுத்திகளை மாற்றவும், அடிப்படை சிக்கல்களுக்குத் தீர்வு காணவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.
- எதிர்கால சிக்கல்களைப் புரிந்துக் கொள்ளவும், வருங்காலத் தேவைகளையும், அறை கூவல்களையும் எதிர்கொள்வதற்கும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பேரியல் பொருளாதாரம் பயன்படுகிறது.
- நடப்புப் பிரச்சனைகளை அறிவியல் பூர்வ விசாரணை மூலம் அறிய பேரியல் பொருளாதாரம் வாய்ப்பளிக்கிறது.
- பொருளாதாரக் குறியீடுகளை பகுத்தாயவும் அவற்றை ஒப்பிடவும் இது உதவுகிறது.
- பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணவும், சரியான கொள்கைகளை உருவாக்கவும், எதிர்காலத்தில் நடக்கவிருப்பனவற்றை முன்கணிக்கவும் இது உதவுகிறது.

**29. பொருளாதார முறைகளின் வகைகளை குறிப்பிடுக.** *[QY-'19; PTA-6; FRT & May-'22]*

விடை. பொருளாதாரங்களை கீழ்க்காணுமாறு பல்வேறு அடிப்படைகளில் வகைப்படுத்தலாம்.

- **வளர்ச்சி நிலை :** வளர்ந்த, வளர்ச்சி குன்றிய, வளராத வளரும் பொருளாதாரங்கள்.
- **நடவடிக்கைகளின் முறை :** முதலாளித்துவ, சமதரும, கலப்புப் பொருளாதாரங்கள்.
- **நடவடிக்கைகள் அளவு :** சிறிய, பெரிய பொருளாதாரங்கள்.
- **செயல்படும் தன்மை :** நிலையான பொருளாதாரங்கள், இயங்கும் பொருளாதாரங்கள்.
- **செயல்தன்மை :** மூடிய பொருளாதாரம், திறந்த பொருளாதாரம்.
- **முன்னேற்ற தன்மை :** பழமையான, புதிய பொருளாதாரங்கள்.
- **நாட்டு வருமான அளவு :** குறைந்த வருமானம், நடுத்தர வருமானம் மற்றும் அதிக வருமான பொருளாதாரங்கள்.

**30. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.** *[PTA-6; Aug-'21; July-'22; QY-'23]*

விடை.
- **தனியார் சொத்துரிமையும் பரம்பரைச் சட்டமும் :** முதலாளித்துவத்தின் முக்கிய இயல்பு என்னவெனில் உழைப்பு, மூலதனம், இயந்திரங்கள், சுரங்கம் போன்ற அனைத்து வளங்களும் தனிமனிதர்களுக்குச் சொந்தமாக இருக்கும்.
- **தெரிந்தெடுப்பதில் சுதந்திரம் :** ஒவ்வொரு தனிமனிதரும் தங்களது வேலையைத் தேர்ந்தெடுப்பதிலும், உற்பத்தி செய்யும் பண்டங்களைத் தேர்ந்தெடுப்பதிலும், வியாபார இடத்தை தெரிவு செய்வதிலும் முழு சுதந்திரம் பெற்றிருப்பர்.
- **இலாப நோக்கம் :** முதலாளித்துவப் பொருளாதாரத்தில், அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளிலும் இலாபம் பெறுவதே உந்து விசையாகக் காணப்படும்.
- **போட்டியில் சுதந்திரம் :** பண்டங்கள் சந்தை, காரணிகள் சந்தை ஆகிய இரண்டிலும் முழு சுதந்திரம் உண்டு. அரசாங்கமோ வேறு எந்த அமைப்போ நிறுவனங்களின் வாங்குதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளில் தலையிட முடியாது.
- **விலை இயங்கு முறை :** விலை இயங்கு முறையானது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இதயமாகும்.
- **அரசின் பங்கு :** முதலாளித்துவப் பொருளாதாரத்தின், அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் விலை இயங்கு முறையானது கட்டுப்படுத்துவதால், அரசின் பங்கு மிகக் குறைவாக இருக்கும்.
- **வருமான ஏற்றத்தாழ்வு :** முதலாளித்துவ சமுதாயம் இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்படுகிறது. சொத்துகளை வைத்திருப்பவர்கள், சொத்துக்கள் இல்லாதவர்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

**31. சமதரும குறைகளைக் கூறுக.** *[PTA-1; Mar & QY-'23]*

விடை.
- **சிவப்பு நாடா முறையும் அரசு அலுவலர்களும் (அதிகார வர்க்கம்) :** அனைத்து முடிவுகளையும் அரசு அமைப்புகளே எடுப்பதால், அரசு அலுவலர்கள் பலரின் அனுமதி பெற வேண்டி, கோப்புகள் ஒரு மேசையிலிருந்து மற்றொன்றுக்கு செல்லும் கால அளவு அதிகமாகிறது. இதனால் சிவப்பு நாடா முறை ஏற்படுகிறது.
- **ஊக்கமில்லாமை :** சமதருமத்தின்மிகப்பெரிய குறை என்பது, இந்த முறையில் திறமைக்கு எந்த ஊக்கமும் அளிப்பதில்லை எனவே, உற்பத்தித் திறனும் பாதிக்கப்படும்.

- **தெரிவு செய்வதில் சுதந்திரம் குறைவு:** பண்டங்கள், பணிகள் நுகர்வதில் தெரிவு செய்யும் சுதந்திரம் நுகர்வோரால் அனுபவிக்க முடியாது.
- **அதிகாரம் குவிதல் :** அரசே அனைத்து முடிவுகளையும் எடுக்கிறது. பொருளாதார தீர்மானங்களில் தனியார் எந்த முயற்சியும் எடுப்பது இல்லை. எனவே, அரசே மிகவும் சக்தி வாய்ந்ததாக கருதப்படுகிறது. அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்பாகவும் அமைகிறது.

**32. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.**

*[HY-'19; PTA-2; Sep-2020; FRT-'22]*

விடை.
- **சொத்து, உற்பத்திச் சாதனங்களின் உரிமம்:** உற்பத்திச் சாதனங்களும், சொத்துகளும் தனியாருக்கும், பொதுத்துறைக்கும் சொந்தமாக இருக்கும்.
- **பொதுத்துறையும், தனியார் துறையும் இணைந்திருக்கும்:** கலப்புப் பொருளாதாரங்களில் தனியார்துறைகள், பொதுத்துறைகள் ஆகிய இரண்டும் இணைந்திருக்கும்.
- **பொருளாதாரத் திட்டமிடல் :** மையத் திட்டக்குழு பொருளாதாரத் திட்டங்களைத் தயாரிக்கும். அரசினால் தயாரிக்கப்படும் தேசியத் திட்டங்களை தனியார் துறையும் பொதுத்துறையும் மதித்து பின்பற்றும்.
- **பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வு:** எதனை உற்பத்தி செய்வது? எப்படி உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது? எப்படிப் பகிர்ந்தளிப்பது எனும் அடிப்படைச் சிக்கல்களை விலை இயக்க முறை, அரசின் தலையீடு ஆகியவை மூலம் தீர்க்கப்படும்.

**33. முதலாளித்துவத்தையும், சமத்தருமத்தையும் வேறுபடுத்துக.** *[PTA-4]*


விடை.

| | முதலாளித்துவம் | சமதருமம் |
|---|---|---|
| ■ | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை |
| ■ | இலாபம் | சமூக நலன் |
| ■ | தடையில்லா சந்தை முறை | ஒன்றிய அரசின் திட்டமுறை |
| ■ | மூலப் பொருள்கள் கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு |
| ■ | சமனற்ற நிலை | சமநிலை |

**34. இரு துறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.**

விடை.
- **இல்லத்துறை :** *[May-'22]*

  இல்லத்துறை தான் பண்டங்கள், பணிகளை வாங்கும் ஒரே துறையும், நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகளை அளிக்கும் ஒரே துறையும் ஆகும். இல்லத்துறையானது அதற்குச் சொந்தமான உற்பத்திக் காரணிகளை அளிப்பதன் மூலம் வருமானம் பெறுகிறது.
- **நிறுவனத் துறை :** நிறுவனத்துறையானது பண்டங்கள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகின்றது.




இருதுறைப் பொருளாதாரத்தில், உற்பத்தி மற்றும் விற்பனை சமமாகவும் வருமானமும், பண்டங்களும் சுழல் ஓட்டமாகவும் காணப்படும்.
- வெளிவட்டமானது உற்பத்திகாரணிகளையும் பண்டங்களையும் எடுத்துரைக்கும் உண்மை ஓட்டமாகவும், உள் வட்டமானது காரணி விலை, பண்டங்களின் விலையைக் குறிக்கும் பண ஓட்டமாகவும் காணப்படும்.

இங்கு $Y = C + I$

Y என்பது வருவாய்; C என்பது நுகர்வு; I என்பது முதலீடு.

### பகுதி – ஈ

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.**

**35. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.**

*[QY-'19; PTA-1; June & QY-'23; Mar-'24]*

விடை. பேரியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லை மிகப் பெரியதாகவும் பல முக்கியமான பகுதிகளை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது.

www.surabooks.com




- **நாட்டு வருமானம் :** நாட்டு வருமானம் கணக்கிடுதல், நாட்டு வருமானத்தில் பல துறைகளின் பங்கு முதலானவை பேரியல் பொருளாதாரப் பகுத்தாய்வின் அடிப்படை கூறுகளாகும்.
- **பண வீக்கம் :** பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும். மொத்த விலைக் குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண், ஆகியவற்றைப் பயன்படுத்தி மொத்த விலை அளவை மதிப்பிடுவது அவசியமாக இருக்கிறது.
- **வணிகச் சுழற்சி :** பொதுவாக எல்லா நாடுகளும் வணிக ஏற்றத்தாழ்வாலும், வணிக சுழற்சியாலும் ஏற்படும் சிக்கல்களைச் சந்திக்கின்றன. மொத்த பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வணிகச் சுழற்சி மாற்றங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது.
- **வறுமையும் வேலையின்மையும் :** வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமையும், வேலையின்மையும் மிகப் பெரிய சிக்கலாக உள்ளது. இது ஒரு பொருளாதார முரண்பாடுகளில் ஒன்றாகும்.
- **பொருளாதார வளர்ச்சி :** பேரியல் பகுத்தாய்வின் மூலம் தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி, முன்னேற்றம், அவற்றைத் தீர்மானிக்கும் காரணிகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.
- **பொருளாதாரக் கொள்கைகள் :** பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதற்குப் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது. அடிப்படை சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், தடைகளைத் தகர்த்தெறியவும், வளர்ச்சியை அடைவதற்கும் பொருளாதாரக் கொள்கைகள் தேவைப்படுகின்றன.

**36. நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.**

*[Govt. MQP -'19; PTA-2, 5; July-'22; HY-'23]*

**விடை.**
- ஒரு பொருளாதாரத்தின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தியும் நுகர்வும் ஆகும்.
- இந்த இரு நடவடிக்கைகளுக்கு பல்வேறு பிற நடவடிக்கைகள் உதவுகின்றன.
- இந்த நடவடிக்கைகளின் தலையான நோக்கம் வளர்ச்சியை அடைவதாகும். இந்த பரிமாற்ற நடவடிக்கையானது உற்பத்திக்கும் நுகர்வு பணிகளுக்கும் உதவுகின்றது.
- இந்த நடவடிக்கைகள் பல்வேறு பொருளாதாரம், பொருளாதாரமற்ற நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகின்றன.
- **முக்கியமான பொருளாதார நடவடிக்கைகளாவன** (Economic Activities): போக்குவரத்து, வங்கிப்பணி, விளம்பரம், திட்டமிடல், அரசின் கொள்கை மற்றும் பிற பணிகள் ஆகும்.

**செயல்பாட்டின் அடிப்படையில் பொருளாதாரத்தின் பணிகள்**




- **முக்கிய பொருளாதாரமற்ற நடவடிக்கைகளாவன** (Non-Economic Activities): சுற்றுச்சூழல், உடல் நலம், கல்வி, பொழுதுபோக்கு, ஆட்சிமுறை, சட்டத்திட்டங்கள் முதலியன.
- பிற பொருளாதாரத்தின் வெளி நடவடிக்கைகளான ஏற்றுமதி, இறக்குமதி, பன்னாட்டு உறவுகள், குடியேற்ற இடப்பெயர்ச்சிகள், அயல் முதலீடு, அயல் நாட்டு செலாவணி ஈட்டல் முதலான பொருளாதார அமைப்பின் மொத்தச் செயல்பாட்டையும் பாதிக்கின்றன.

**37. முதலாளித்துவம், சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.** *[PTA-3, 4, 6; Mar. & Sep-2020; FRT-'22]*

விடை.

| வ. எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் |
| 3. | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | ஒன்றிய அரசின் திட்டமுறை |
| 4. | அரசின் பங்கு | மூலப்பொருள்கள் கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு |
| 5. | வருமானப் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை |
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை |
| 8. | முக்கியமான சிக்கல் | சமமின்மை | திறனின்மை |

**38. முதலாளித்துவம், சமதருமம், கலப்புப் பொருளாதாரம் ஆகியவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.**
*[Aug-'21; Mar & QY- '23]*

விடை.

| வ. எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமதருமப் பொருளாதாரம் | கலப்புப் பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் உரிமையும் பொதுத்துறை உரிமையும் |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலனும் இலாப நோக்கமும் |
| 3. | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | ஒன்றிய அரசின் திட்டமுறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| 4. | அரசின் பங்கு | மூலப் பொருள்கள் கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| 5. | வருமானப் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியாரும் அரசு நிறுவனங்களும் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாட்டுடன் சுதந்திரம் |
| 8. | முக்கியமான சிக்கல் | சமமின்மை | திறனின்மை | சமமின்மையும் திறனின்மையும் |

## பிடிஏ (PTA) தேர்வு வினா - விடைகள்

### 1 மதிப்பெண்

1. (i) நவீன நுண்ணியல் பொருளாதாரத்தின் தந்தை J.M. கீன்ஸ் ஆவார். *[PTA-5]*

(ii) நவீன பேரியல் பொருளாதாரத்தின் தந்தை J.M. கீன்ஸ் ஆவார்.

அ) (i) மற்றும் (ii) சரியானது ஆ) (i) மற்றும் (ii) தவறானது


இ) (i) சரியானது ஆனால் (ii) தவறானது ஈ) (i) தவறானது ஆனால் (ii) சரியானது

**விடை ஈ) (i) தவறானது ஆனால் (ii) சரியானது**

## 2 மதிப்பெண்கள்

**1. இருதுறை பொருளாதாரத்தின் வருவாய் வட்ட ஓட்டத்தை குறிக்கும் வரைபடத்தை வரைக.** *[PTA-3]*

**விடை.**





## 5 மதிப்பெண்கள்

**1. நான்கு துறைப் பொருளாதாரத்தில் வருமான சுழல் ஓட்டத்தினை வரைபடத்துடன் விளக்குக.** *[QY-'19; PTA-3; FRT-'22]*

**விடை.** நான்கு துறைப் பொருளாதாரத்தில், இல்லம், நிறுவனம், அரசு இவற்றோடு வெளியுறவுத்துறையும் இணைக்கப்படுகிறது.

- உண்மை வாழ்க்கையில், நான்கு துறைப் பொருளாதாரம் காணப்படுகிறது.
- இந்த நான்கு துறைப் பொருளாதார மாதிரியில் அமைந்துள்ள துறைகளாவன.
  - ✦ இல்லங்கள் (Household)
  - ✦ நிறுவனங்கள் (Firms)
  - ✦ அரசு (Government)
  - ✦ அயல்நாட்டு வணிகத்துறை (External Sector)
- வெளியுறவு துறையில் அதிகமாக அடங்குவது ஏற்றுமதிகளும் (Exports) இறக்குமதிகளும் (Imports) ஆகும். இதை வரைபடம் விளக்குகிறது.
- நான்கு துறைப் பொருளாதாரத்தில், ஒட்டுமொத்த செலவானது, உள்நாட்டு செலவுகள்.
- (C+I+G) யுடன் நிகர ஏற்றுமதி (X–M) யும் உள்ளடங்கும்.

$$Y = C + I + G + (X - M)$$




# அரசு தேர்வு வினா – விடைகள்

## 2 மதிப்பெண்கள்

**1. பொருளாதார அமைப்புகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது?** *[July-'22]*

**விடை.**
- வளர்ச்சி நிலை
- நடவடிக்கைகளின் முறை
- நடவடிக்கைகள் அளவு
- செயல்படும் தன்மை
- செயல்தன்மை
- முன்னேற்ற தன்மை
- நாட்டு வருமான அளவு

## 3 மதிப்பெண்கள்


**1. பேரியல் பொருளாதாரத்தின் குறைகளை விளக்குக.** *[Govt. MQP -'19]*

**விடை. பேரியல் பொருளாதாரத்தின் குறைகள் :**
- பொருளாதாரம் முழுமைக்கும் மிகைப்படுத்தி பொதுமையாக்கும் ஆபத்து காணப்படுகிறது.
- தனிப்பட்ட நிறுவனங்கள் அனைத்தும் ஓரினத் தன்மை வாய்ந்தவை.
- தொகுத்தலில் தவறுகள் காணப்படும்.
- பொருளாதார நடவடிக்கைகளை பல பொருளாதாரமற்ற காரணிகள் தீர்மானிக்கின்றன.

## 5 மதிப்பெண்கள்

**1. மூன்று துறை வருமான சுழல் ஓட்ட மாதிரியினை விரிவாக விளக்குக.** *[Sep -2020; May-'22]*

**விடை. மூன்று துறைப் பொருளாதாரத்தின் வருமான சுழல் ஓட்டம் :**




- இல்லத்துறைக்கும் நிறுவனத்துறைக்கும் மேலாக அரசுத்துறை சேரும்போது மூன்று துறை மாதிரியாக(Three Sector Model) அமைகிறது.
- அரசானது இல்லத்துறைக்கும் நிறுவனங்களுக்கும் வரி விதிக்கின்றது.
- நிறுவனங்களிலிருந்து பண்டங்கள், பணிகளை வாங்குகின்றன.
- மேலும், இல்லத்துறையிலிருந்து நிறுவனங்கள் உற்பத்தி காரணிகளையும் பெறுகின்றன.
- இதற்கு மறுபுறத்தில், அரசானது ஓய்வு ஊதியம், இழப்பீடு, மானியம் ஆகிய சமூக பரிவர்த்தனைகளை இல்லங்களுக்கு வழங்குகிறது.
- அதுபோல, நிறுவனங்களிடமிருந்து வாங்கும் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு பணமளிக்கிறது.
- மூன்று துறை பொருளாதார மாதிரியை வரைபடம் விளக்குகிறது.
- மூன்று துறை மாதிரியில், நாட்டு வருமானம் என்பதை நுகர்வுச் செலவு, முதலீட்டு செலவு, அரசின் செலவு ஆகியவற்றைக் கூட்டுவதால் அடையலாம்.

$$Y = C + I + G$$

- இங்கு,

  Y = வருவாய்; C = நுகர்வுச் செலவு; I = முதலீட்டுச் செலவு; G = அரசின் செலவு

**2. கலப்புப் பொருளாதாரத்தின் நன்மைகளை விளக்குக.** *[FRT-'22]*

**விடை. கலப்புப் பொருளாதாரத்தின் நன்மைகள் :**

- **அதிவேகப் பொருளாதார வளர்ச்சி :** கலப்புப் பொருளாதாரத்தின் சிறந்த நன்மை அதிக வேக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும். இவ்விதம், பொதுத் தேவைகளும், தனியாரின் தேவைகளும் நிறைவேற்றப்படுகின்றன.
- **சமமான பொருளாதார வளர்ச்சி :** பொருளாதாரத்தின் சமநிலை வளர்ச்சியை கலப்புப் பொருளாதாரம் ஊக்குவிக்கிறது. இது வேளாண்மை, தொழில், நுகர்வுப் பண்டங்கள், மூலதனப் பண்டங்கள், சமமான உற்பத்தியையும் கிராமம், நகரம் ஆகியவற்றிடையே சமமான வளர்ச்சியையும் ஊக்கப்படுத்தும்.
- **வளங்களைச் சரியாக பயன்படுத்துதல் :** ஒரு கலப்புப் பொருளாதாரத்தில், வளங்களின் சரியான பயன்பாட்டை அரசு உறுதிப்படுத்தலாம். அரசு பல்வேறு முக்கியமான நடவடிக்கைகளை நேரடியாகக் கட்டுப்படுத்தும். மேலும் தனியார் துறையை மறைமுகமாகக் கட்டுப்படுத்தும்.
- **பொருளாதாரச் சமத்துவம் :** அரசு, வளர்வீத வரிமுறையைப் பயன்படுத்தி பொருளாதார சமத்துவத்தைக் கொண்டு வருகிறது.
- **சமூகத்துக்கு சிறப்பு நன்மைகள் :** குறைந்த அளவுக் கூலி, பகிர்வு முறைச் சட்டங்கள், நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்துதல், சமூக நல நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் தொழிலாளர்கள், நலிவடைந்த பிரிவினரின் ஆர்வங்களை அரசு பாதுகாக்கும்.

## கூடுதல் வினாக்கள்

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தெரிவு செய்க:**

**1 மதிப்பெண்**

**1. பொதுவாக ________ என்பது விலை வீழ்ச்சியை குறிக்கும்.**

| | |
|---|---|
| அ) பணவாட்டம் | ஆ) பணவீக்கம் |
| இ) வாணிபம் | ஈ) வளர்ச்சி வீதம் |

விடை அ) பணவாட்டம்

**2. நுண்ணிய என்பது ________.**

| | |
|---|---|
| அ) பெரிய | ஆ) விரிவான |
| இ) சிறிய | ஈ) அ மற்றும் ஆ |

விடை இ) சிறிய

3. **பேரியல் என்றால் _______.**
அ) பெரிய
ஆ) ஒட்டுமொத்த
இ) ஒட்டு மொத்த பொருளாதாரம்
ஈ) மேற்குறிப்பிட்ட அனைத்தும்

**விடை ஈ) மேற்குறிப்பிட்ட அனைத்தும்**

4. **நுண்ணினப் பொருளாதாரம் _______ எனவும் அழைக்கப்படுகிறது.**
அ) விலை கோட்பாடு
ஆ) வருமானக் கோட்பாடு
இ) வாணிய சுழற்சி
ஈ) வறுமை மற்றும் வேலையின்மை

**விடை அ) விலை கோட்பாடு**

5. **திட்டமிட்ட பொருளாதாரம் _______ எனவும் அழைக்கப்படுகிறது.**
அ) முதலாளித்துவ பொருளாதாரம்
ஆ) சமதருமப் பொருளாதாரம்
இ) கலப்புப் பொருளாதாரம்
ஈ) மேற்காணும் அனைத்தும்

**விடை ஆ) சமதருமப் பொருளாதாரம்**

6. **சமதருமப் பொருளாதாரத்தின் தந்தை _______.**
அ) ஆடம்ஸ்மித் ஆ) J. M. கீன்சு
இ) கார்ல் மார்க்ஸ் ஈ) J. R. ஹிக்ஸ்

**விடை இ) கார்ல் மார்க்ஸ்**

7. **கலப்புப் பொருளாதாரத்திற்கு எடுத்துக்காட்டு _______.**
அ) இந்தியா ஆ) பிரான்சு
இ) சீனா ஈ) அ மற்றும் ஆ

**விடை ஈ) அ மற்றும் ஆ**

8. **_______ அமைப்பு முறையில், தனியார் மற்றும் பொதுத் துறைகள் இணைந்த பொருளாதாரமாகும்.**
அ) முதலாளித்துவம் ஆ) பழமையான
இ) கலப்பு ஈ) சமதருமம்

**விடை இ) கலப்பு**

9. **சமதருமப் பொருளாதாரத்தின் முக்கிய நோக்கம் _______.**
அ) சமூக நலன்
ஆ) சமூக மற்றும் கூட்டு நலன்
இ) இலாபம்
ஈ) அ மற்றும் ஆ **விடை ஈ) அ மற்றும் ஆ**

10. **அங்காடி சக்திகள் _______.**
அ) அளிப்பு மற்றும் விலை
ஆ) தேவை மற்றும் விலை
இ) விலை மற்றும் பண்டம்
ஈ) அளிப்பு, தேவை மற்றும் விலை

**விடை ஈ) அளிப்பு, தேவை மற்றும் விலை**

11. **தனியார் சொத்துரிமை அதிகமாக காணப்படும் அமைப்பு _______.**
அ) பழமையான பொருளாதாரம்
ஆ) முதலாளித்துவம்
இ) சமதருமம்
ஈ) கலப்பு பொருளாதாரம்

**விடை ஆ) முதலாளித்துவம்**

12. **'விலைக் கருவி' காணப்படும் பொருளாதாரம் _______.**
அ) சமதருமம் ஆ) முதலாளித்துவம்
இ) கலப்புப் பொருளாதாரம்
ஈ) கலப்பு **விடை ஆ) முதலாளித்துவம்**

13. **அரசின் தலையீட்டின்மையில் இல்லாத பொருளாதார அமைப்பு _______.**
அ) சமதருமப் பொருளாதாரம்
ஆ) முதலாளித்துவப் பொருளாதாரம்
இ) பழமையான பொருளாதாரம்
ஈ) கலப்புப் பொருளாதாரம்

**விடை ஆ) முதலாளித்துவப் பொருளாதாரம்**

14. **இல்லத்துறை தான் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்கும் ஒரே துறை _______.**
அ) நிறுவனம் ஆ) இல்லம்
இ) அரசு
ஈ) அயல்நாட்டு வாணிபம்

**விடை அ) நிறுவனம்**

15. **எந்த மாதிரியில், நாட்டு வருமானம் என்பது நுகர்வுச் செலவு, முதலீட்டு செலவு மற்றும் அரசின் செலவு ஆகியவற்றை கூட்டுவதால் அடையலாம்?**
அ) ஒரு துறை மாதிரி
ஆ) இரண்டு துறை மாதிரி
இ) மூன்று துறை மாதிரி
ஈ) நான்கு துறை மாதிரி

**விடை இ) மூன்று துறை மாதிரி**

16. **_______ என்பது சமதரும பொருளாதாரம் மற்றும் முதலாளித்துவ பொருளாதாரத்தின் கலவையாகும்.**
அ) சமதரும பொருளாதாரம்
ஆ) முதலாளித்துவ பொருளாதாரம்
இ) பழமைப் பொருளாதாரம்
ஈ) கலப்புப் பொருளாதாரம்

**விடை ஈ) கலப்புப் பொருளாதாரம்**

17. **கீழ்கண்டவற்றுள் சமதரும பொருளாதாரத்தின் தந்தையை தெரிவு செய்.**
அ) ஆடம்ஸ்மித் ஆ) J. M. கீன்சு
இ) கார்ல் மார்க்ஸ் ஈ) மார்ஷல்

**விடை இ) கார்ல் மார்க்ஸ்**

**18. கீழ்வருவனவற்றுள் எது மாறும் இருப்பு _______.**

அ) செல்வம் ஆ) வருமானம்
இ) அயல்நாட்டுச் செலவாணி
ஈ) பணம்

விடை அ) செல்வம்

**19. கீழ்கண்ட பொருளாதார முறையில் அனைத்து வளங்களையும் அரசே உரிமமாக்கி பயன்படுத்துவது.**

அ) முதலாளித்துவப் பொருளாதாரம்
ஆ) சமதருமப் பொருளாதாரம்
இ) உலகத்துவப் பொருளாதாரம்
ஈ) கலப்புப் பொருளாதாரம்

விடை ஆ) சமதருமப் பொருளாதாரம்

**20. கீழ்கண்ட _______ அமைப்பு முறையில் மைய திட்டமே அதிகாரம் மேற்கொள்ளும்.**

அ) சமதருமப் பொருளாதாரம்
ஆ) உலகத்துவப் பொருளாதாரம்
இ) கலப்புப் பொருளாதாரம்
ஈ) முதலாளித்துவ பொருளாதாரம்

விடை அ) சமதருமப் பொருளாதாரம்

**21. முதலாளித்துவம் _______ போராட்டத்திற்கு வழிவகுக்கிறது.**

அ) மையத் திட்டம் ஆ) வகுப்பு
இ) சமூக நலன்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

விடை ஆ) வகுப்பு

## II. கீழ்கண்ட குறியீடுகளைப் பயன்படுத்தி சரியாக பொருத்து:

**1.**

| | | | |
|---|---|---|---|
| a) | பேரியல் பொருளாதாரத்தின் தந்தை | i) | J. M. கார்ல் மார்க்ஸ் |
| b) | சமதரும பொருளாதாரத்தின் தந்தை | ii) | கார்ல் மார்க்ஸ் |
| c) | நுண்ணிய | iii) | சிறிய |
| d) | பேரியல் | iv) | பெரிய |

குறியீடுகள் :

அ) a-(i) b-(ii) c-(iii) d-(iv)
ஆ) a-(ii) b-(i) c-(iii) d-(iv)
இ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஈ) a-(i) b-(iv) c-(ii) d-(iii)

விடை அ) a-(i); b-(ii); c-(iii) d-(iv)

**2.**

| | | | |
|---|---|---|---|
| a) | "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுக் கோட்பாடு" | i) | வருமானக் கோட்பாடு |
| b) | பேரியல் | ii) | பணவீக்கம் |
| c) | ஒட்டுமொத்த பொருளாதாரம் | iii) | 1936 |
| d) | பொதுவான விலையில் தொடர் உயர்வு | iv) | கிரேக்கம் |

குறியீடுகள் :

அ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஆ) a-(ii) b-(i) c-(iv) d-(iii)
இ) a-(iii) b-(iv) c-(i) d-(ii)
ஈ) a-(iv) b-(i) c-(ii) d-(iii)

விடை இ) a-(iii); b-(iv); c-(i) d-(ii)

**3.**

| | | | |
|---|---|---|---|
| a) | சமதருமப் பொருளாதாரம் | i) | தடையில்லா பொருளாதாரம் |
| b) | பழமைப் பொருளாதாரம் | ii) | கட்டளை பொருளாதாரம் |
| c) | கலப்புப் பொருளாதாரம் | iii) | பிழைப்பு மட்ட பொருளாதாரம் |
| d) | முதலாளித்துவ பொருளாதாரம் | iv) | தனியார் துறையும், பொதுத்துறையும் இணைந்து செயல்படுதல் |

குறியீடுகள் :

அ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)
ஆ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
இ) a-(i) b-(iv) c-(iii) d-(ii)
ஈ) a-(ii) b-(iii) c-(i) d-(iv)

விடை அ) a-(ii); b-(iii); c-(iv) d-(i)

**4.**

| | | | |
|---|---|---|---|
| a) | அரசின் கட்டுபாடு | i) | கலப்புப் பொருளாதாரம் |
| b) | பழமையான பழக்க வழக்கங்கள் | ii) | முதலாளித்துவப் பொருளாதாரம் |
| c) | இலாப நோக்கம் | iii) | சமதருமப் பொருளாதாரம் |
| d) | தனியார் துறை மற்றும் பொதுத் துறையின் கலவையாகும் | iv) | பழமைப் பொருளாதாரம் |

குறியீடுகள் :

அ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)
ஆ) a-(iii) b-(iv) c-(ii) d-(i)
இ) a-(iii) b-(i) c-(iv) d-(ii)
ஈ) a-(iv) b-(iii) c-(i) d-(ii)

**விடை ஆ) a-(iii); b-(iv); c-(ii) d-(i)**

5.

| | | | |
|---|---|---|---|
| a) | சந்தை சக்திகள் | i) | சமதருமம் |
| b) | ஆட்சியாளர் ஆதிக்கம் | ii) | வளங்களை திறம்பட பயன்படுத்தாமை |
| c) | தனியார் சொத்துரிமை | iii) | அளிப்பு, தேவை மற்றும் விலை |
| d) | காலதாமதம் மற்றும் இலஞ்சம் | iv) | தடையில்லா பொருளாதாரம் |

குறியீடுகள் :

அ) a-(iii) b-(i) c-(iv) d-(ii)
ஆ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
இ) a-(ii) b-(iv) c-(i) d-(iii)
ஈ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)

**விடை அ) a-(iii); b-(i); c-(iv) d-(ii)**

6.

| | | | |
|---|---|---|---|
| a) | கட்டளை பொருளாதாரம் | i) | மேற்கு ஜெர்மனி |
| b) | முதலாளித்துவ நாடு | ii) | க்யூபா |
| c) | சமதர்ம நாடு | iii) | இந்தியா |
| d) | கலப்புப் பொருளாதாரம் | iv) | சமதருமப் பொருளாதாரம் |

குறியீடுகள் :

அ) a-(iii) b-(ii) c-(iv) d-(i)
ஆ) a-(iv) b-(i) c-(ii) d-(iii)
இ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஈ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)

**விடை ஆ) a-(iv); b-(i); c-(ii) d-(iii)**

7.

| | | | |
|---|---|---|---|
| a) | சம்மந்தமான உள் ஒழுங்குமுறை | i) | பழமையான பொருளாதாரம் |
| b) | முழுமையான ஈடுபாடு | ii) | கலப்புப் பொருளாதாரம் |
| c) | வரையறுக்கப்பட்ட பாத்திரம் கூட்டாட்சி | iii) | முதலாளித்துவம் |
| d) | கூட்டாட்சி அரசு | iv) | சமதருமப் பொருளாதாரம் |

குறியீடுகள் :

அ) a-(iii) b-(iv) c-(ii) d-(i)
ஆ) a-(i) b-(ii) c-(iv) d-(iii)
இ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஈ) a-(i) b-(ii) c-(iii) d-(iv)

**விடை அ) a-(iii); b-(iv); c-(ii) d-(i)**

## III. கீழ்கண்டவற்றுள் சரியா, தவறா என தெரிவு செய் :

1. (i) சமதருமப் பொருளாதார அமைப்பில் போட்டியிடல் காணப்படுகிறது.
(ii) முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இலாபமே முக்கிய நோக்கமாகும்.

அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**விடை ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி**

2. (i) சமதருமப் பொருளாதார அமைப்பு முறையில், மைய திட்ட அதிகாரமே அனைத்து முடிவுகளையும் மேற்கொள்ளும்.
(ii) கலப்புப் பொருளாதாரம் என்பது பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் கலவையாகும்.

அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) மட்டும் சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**விடை அ) (i) மற்றும் (ii) சரி**

3. (i) 'Makros' என்ற கிரேக்க மொழியில் இருந்து 'Macro' என்ற சொல் பெறப்பட்டது.
(ii) 'Makros' என்ற இலத்தின் சொல்லில் இருந்து 'Macro' என்ற சொல் பெறப்பட்டது.

அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**விடை இ) (i) சரி ஆனால் (ii) தவறு**

www.surabooks.com

4. (i) 'Makros' என்றால் பெரிய என்று பொருள்படும்.
(ii) 'Macro' என்றால் சிறிய என்று பொருள்படும்.

அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**விடை அ) (i) மற்றும் (ii) சரி**

## IV. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருந்தியதை தேர்ந்தெடு :

1.

| | | | |
|---|---|---|---|
| அ) | முதலாளித்துவம் | - | சமூக நலன் |
| ஆ) | சமதருமம் | - | இலாப நோக்கம் |
| இ) | பழமையான பொருளாதாரம் | - | நவீன தொழில்நுட்பம் |
| ஈ) | கலப்புப் பொருளாதாரம் | - | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |

**விடை ஈ) கலப்புப் பொருளாதாரம் - சமூக நலன் மற்றும் இலாப நோக்கம்**

2.

| | | | |
|---|---|---|---|
| அ) | இருதுறை மாதிரி | - | நிறுவனம் மற்றும் தொழில் |
| ஆ) | மூன்று துறை மாதிரி | - | நிறுவனம், இல்லங்கள், மற்றும் தொழிற்துறை |
| இ) | நான்கு துறை மாதிரி | - | நிறுவனம், இல்லங்கள் அரசு மற்றும் அயல்நாட்டு வாணிபம் |
| ஈ) | இந்தியா | - | இருதுறை மாதிரியின் தோல்வி |

**விடை இ) நான்கு துறை மாதிரி -நிறுவனம், இல்லங்கள், அரசு மற்றும் அயல்நாட்டு வாணிபம்**

3.

| | | | |
|---|---|---|---|
| அ) | நுண்ணியல் | - | பெரிய |
| ஆ) | பேரியல் | - | சிறிய |
| இ) | பேரியல் பொருளாதாரத்தின் தந்தை | - | ஆடம்ஸ்மித் |
| ஈ) | சமதருமப் பொருளாதாரத்தின் தந்தை | - | கார்ல் மார்க்ஸ் |

**விடை ஈ) சமதருமப் பொருளாதாரத்தின் தந்தை - கார்ல் மார்க்ஸ்**

## V. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருந்தாத ஒன்றை தெரிவு செய் :

1.

| | | | |
|---|---|---|---|
| அ) | வருமான ஏற்றத்தாழ்வு | - | முற்றுரிமை |
| ஆ) | நேர்மையான மற்றும் வாடகை கொள்கை | - | முதலாளித்துவம் |
| இ) | சமமான வாய்ப்பு | - | கலப்புப் பொருளாதாரம் |
| ஈ) | அதிகபட்ச சமூக நன்மை | - | சமதருமம் |

**விடை இ) சமமான வாய்ப்பு - கலப்பு பொருளாதாரம்**

2.

| | | | |
|---|---|---|---|
| அ) | கலப்புப் பொருளாதாரம் | - | வளங்களை திறன்பட பயன்படுத்தல் |
| ஆ) | சமதருமம் | - | சமூகநலன் |
| இ) | முதலாளித்துவ பொருளாதாரம் | - | இலாப நோக்கம் |
| ஈ) | பழமைப் பொருளாதாரம் | - | நவீன தொழில்நுட்பம் |

**விடை ஈ) பழமைப் பொருளாதாரம் - நவீன தொழில்நுட்பம்**

3.

| | | | |
|---|---|---|---|
| அ) | பொருளியலின் இரு கிளைகள் | - | நுண்ணின மற்றும் பேரியல் பொருளாதாரம் |
| ஆ) | பொருளியலில் அறிவியலுக்கான முதல் நோபல் பரிசு | - | ரேக்னர் ஃபிரிஸ்ச் |
| இ) | நவீன பேரியல் பொருளாதாரத்தின் தந்தை | - | ஆடம் ஸ்மித் |
| ஈ) | பேரியல் பொருளாதாரத்தின் தந்தை | - | J. M. கீன்சு |

**விடை இ) நவீன பேரியல் பொருளாதாரத்தின் தந்தை - ஆடம் ஸ்மித்**

4.

| | | | |
|---|---|---|---|
| அ) | பொதுவான பொருளாதார முறைகள் | - | சமதரும பொருளாதாரம் |
| ஆ) | பேரியல் பொருளாதாரத்தின் எல்லை | - | பணவீக்கம் |
| இ) | முதலாளித்துவ பொருளாதாரத்தின் தந்தை | - | ஆடம்ஸ்மித் |
| ஈ) | முதலாளித்துவம் | - | சமூக நலன் |

**விடை ஈ) முதலாளித்துவம் - சமூக நலன்**

5.

| | | | |
|---|---|---|---|
| அ) | அங்காடிப் பொருளாதாரம் | - | முதலாளித்துவ பொருளாதாரம் |
| ஆ) | சமதரும பொருளாதாரத்தின் நன்மை | - | ஏற்றதாழ்வுகளை குறைத்தல் |
| இ) | கார்ல் மார்க்ஸ் | - | சமதருமப் பொருளாதாரத்தின் தந்தை |
| ஈ) | கலப்புப் பொருளாதாரம் | - | U.S.A |

விடை ஈ) **கலப்பு பொருளாதாரம் - U.S.A**

6.

| | | | |
|---|---|---|---|
| அ) | வருவாயின வட்ட ஓட்டம் | - | இரண்டு |
| ஆ) | நான்கு துறைகள் | - | இல்லங்கள், நிறுவனம், அரசு மற்றும் அயல்நாட்டு வாணிபம் |
| இ) | சமதருமம் | - | மத்திய திட்டக்குழு |
| ஈ) | ஒட்டுமொத்த சுதந்திரம் | - | முதலாளித்துவம் |

விடை **அ) வருவாயின் வட்ட ஓட்டம் - இரண்டு**

7.

| | | | |
|---|---|---|---|
| அ) | செயல்பாட்டின் அடிப்படையில் பொருளாதாரத்தின் பணிகள் | - | உற்பத்தி மற்றும் நுகர்வு |
| ஆ) | பொதுவான பொருளாதார முறைகள் | - | மூன்று |
| இ) | கலப்புப் பொருளாதாரம் | - | இந்தியா |
| ஈ) | முதலாளித்துவ பொருளாதாரம் | - | தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்து செயல்படுதல் |

விடை **ஈ) முதலாளித்துவ பொருளாதாரம்- தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்து செயல்படுதல்**

## VI. கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க. :

1. **கூற்று (A) : பொருளாதார அமைப்பின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகும்.**

**காரணம் (R) : இந்நடவடிக்கையின் தலையாய நோக்கம் வளர்ச்சியை அடைவதாகும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

விடை **அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**

2. **கூற்று (A) : முதலாளித்துவ பொருளாதாரத்தின் முக்கிய நோக்கம் இலாபம் பெறுவதாகும்.**

**காரணம் (R): விலை இயங்கு முறையானது முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் இதயமாகும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

விடை **அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**

3. **கூற்று (A) : சமதருமப் பொருளாதாரத்தில் பெரும்பாலான தொழில் உரிமம் மற்றும் கட்டுபடுத்துவதை அரசே தீர்மானிக்கின்றது.**

**காரணம் (R) : பொது நலமே அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் பின்புல முக்கிய நோக்கமாகும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

விடை **அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**

4. **கூற்று (A) : கலப்புப் பொருளாதாரம் என்பது தனியார் மற்றும் பொதுத் துறையின் கலவையாகும்.**

**காரணம் (R) : முதலாளித்துவம் மற்றும் சமதருமப் பொருளாதார அமைப்பு முறைகளின் தீமைகளை களைய இம்முறை உதவும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

விடை **அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**

www.surabooks.com

5. **கூற்று (A) : ஒரு பொருளாதார அமைப்பின் வருமான சுழல் ஓட்ட மாதிரியானது. அந்த பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குகிறது.**

**காரணம் (R) : வருமான சுழல் ஓட்ட ஆய்வானது நாட்டு கணக்குகள் மற்றும் பேரியல் பொருளாதாரத்தின் அடிப்படையாகும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.
இ) A சரி ஆனால் R தவறு.
ஈ) A தவறு ஆனால் R சரி.

**விடை அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**

## VII. கீழ்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றை தெரிவு செய் :

1. **பேரியல் பொருளாதாரத்தின் உள்ளடக்கம்**

அ) முதலீடு மற்றும் சேமிப்பு
ஆ) பணவீக்கம் மற்றும் வாணிபச் சுழற்சி
இ) அயல்நாட்டு வாணிபம்
ஈ) தனித் தேவை மற்றும் அளிப்பு

**விடை ஈ) தனித் தேவை மற்றும் அளிப்பு**

2. **பொதுவான பொருளாதார முறைகள்**

அ) இந்தியப் பொருளாதாரம்
ஆ) முதலாளித்துவப் பொருளாதாரம்
இ) சமதருமப் பொருளாதாரம்
ஈ) கலப்புப் பொருளாதாரம்

**விடை அ) இந்தியப் பொருளாதாரம்**

3. **முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இயல்புகள்**

அ) தேர்ந்தெடுப்பதில் சுதந்திரம்
ஆ) இலாப நோக்கம்
இ) சமூக நலன்
ஈ) விலைக் கருவி

**விடை இ) சமூக நலன்**

4. **சமதருமப் பொருளாதாரத்தின் தீமைகள்**

அ) சிவப்பு நாடா மற்றும் அதிகார வர்க்கம்
ஆ) ஏற்றத்தாழ்வு குறைத்தல்
இ) ஊக்கமின்மை
ஈ) தெரிவு செய்வதில் சுதந்திரம் குறைவு

**விடை ஆ) ஏற்றத்தாழ்வு குறைத்தல்**

## பகுதி - ஆ

**கீழ்க்கண்டவற்றுக்கு ஓரிரு வார்த்தையில் விடையளி. 2 மதிப்பெண்கள்**

1. **மூன்று பொருளாதார முறைகளின் பெயர்களை கூறு.**

விடை.
- முதலாளித்துவ பொருளாதார முறை (முதலாளித்துவம்)
- சமதருமப் பொருளாதார முறை (சமதருமம்)
- கலப்புப் பொருளாதார முறை (கலப்புத்துவம்).

2. **உலகத்துவம் என்றால் என்ன?**

விடை. பன்னாட்டு வணிகத்தால் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தின் எதிர்நோக்கும் உலகமயமாக்குதல் என்ற புதிய அங்காடி தத்துவத்தை குறிப்பிட்ட, உலகத்துவம் (Globalism) என்ற பதத்தை, மேன்பிரட்டிஸ்டீகர் 2002ம் ஆண்டு உருவாக்கினார். இந்தத் தத்துவம், விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

3. **சமதருமப் பொருளாதாரத்தின் பொருள் தருக.**

விடை.
- கார்ல் மார்க்ஸ் சமதருமத்தின் தந்தை ஆவார்.
- சமதருமம் என்பது மொத்த திட்டமிடுதல், பொது உடைமை, பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் கட்டுப்பாடு ஆகிய முறைகளை குறிப்பிடுவதாகும்.

4. **கலப்புப் பொருளாதாரம் என்றால் என்ன?**

விடை.
- கலப்புப் பொருளாதார அமைப்பு முறையில், தனியார் மற்றும் பொதுத்துறைகள் இணைந்து பொருளாதார மேம்பாட்டிற்காக பணியாற்றுவது ஆகும்.
- முதலாளித்துவம், சமதருமம் ஆகியவற்றின் கலவையாகும்.

5. **கலப்புப் பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகள் யாவை?**

விடை.
- இந்தியா
- இங்கிலாந்து
- பிரான்ஸ்
- பிரேசில் ஆகிய நாடுகள் கலப்பு பொருளாதார நாடுகளுக்கு உதாரணம் ஆகும்.

www.surabooks.com

## பகுதி - இ

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக. 3 மதிப்பெண்கள்**

**1. முதலாளித்துவத்தின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளை விளக்குக.**

விடை.
- **வருமானமும் செல்வச் செறிவும் :** முதலாளித்துவத்தில் வருமானம், செல்வம் ஆகியன சிலரது கைகளில் மட்டும் குவிகிறது. இதனால் வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கிறது.
- **வளங்கள் வீணாக்கப்படுதல் :** போட்டி விளம்பரங்களினாலும் நிகரொத்தப் பண்டங்களினாலும் வளங்கள் அதிக அளவில் வீணாக்கப்படுகின்றன.

**2. சமதருமப் பொருளாதாரத்தின் இயல்புகளை விளக்குக.**

விடை.
- **மையத் திட்டமிடல் :** சமதருமப் பொருளாதாரத்தில், திட்டமிடுதல் என்பது ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும். இம்முறையில், மையத் திட்ட அதிகாரமே அனைத்து முடிவுகளையும் மேற்கொள்ளும்.
- **போட்டி இல்லாமை :** சமதருமப் பொருளாதார அமைப்பு முறையில் போட்டி இல்லாத அங்காடி காணப்படும். பண்டங்கள், பணிகளின் உற்பத்தியையும், பகிர்வையும் அரசே முற்றிலும் கட்டுப்படுத்துகிறது.
- **விலை இயங்கு முறை இல்லாமை :** விலை நிர்ணய முறையானது மையத்திட்ட அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டுக்கும், விதிகளுக்கும் கீழ்தான் இயங்குகிறது.
- **வாய்ப்புகளில் சமத்துவம் :** இலவச மருத்துவம், கல்வி, பயிற்சி ஆகியவை சமதருமப் பொருளாதாரத்தில் அனைவரும் பெறுவதற்கு சம வாய்ப்பு வழங்கப்படும்.

## பகுதி - ஈ

**கீழ்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி : 5 மதிப்பெண்கள்**

**1. சமதருமப் பொருளாதாரத்தின் நன்மைகளை விளக்குக.**

விடை.
- **ஏற்றத்தாழ்வுகள் குறைவு :** எவர் ஒருவரும் தனியார் சொத்துகளை உரிமம் கொண்டும், பயன்படுத்துவதன் மூலமும் மற்றவர்களைச் சுரண்ட அனுமதி இல்லை.
- **வளங்கள் அறிவார்ந்த முறையில் ஒதுக்கீடு:** மையத்திட்ட அதிகாரத்தால் திட்டமிட்டப்படி வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. வளங்கள் விரயமாவது குறைக்கப்படுவதுடன் முன்திட்ட அடிப்படையில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- **வகுப்பு சண்டைகள் இல்லாமை :** ஏற்றத்தாழ்வுகள் குறைவாக இருப்பதால், பணக்காரர், ஏழைகளுக்கிடையேயான சண்டைகள் இருப்பதில்லை. சமூகம் சுமுகமான சூழலில் செயல்படும்.
- **வணிகச் சூழலுக்கு முடிவு :** பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியையும், பகிர்வையும் திட்ட அதிகாரமே முழு கட்டுக்குள் வைத்துக் கொள்ளும். அதனால், வணிகச் சூழல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.
- **சமூக நலன் முன்னேற்றம் :** சுரண்டல் இல்லை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படுகின்றன. ஏற்றத்தாழ்வுமிக்க வணிகச் சூழல் தவிர்த்தல், உற்பத்தித்திறன் அதிகரித்தல் ஆகியவை சமூக நலன் வளர உதவுகின்றன.

**2. கலப்பு பொருளாதாரத்தின் தீமைகளை விளக்குக.**

விடை. **கலப்பு பொருளாதாரத்தின் தீமைகள் :**
- **ஒருங்கிணைப்பில்லாமை :** கலப்புப் பொருளாதாரத்தின் மிகப்பெரிய குறைபாடு பொதுத்துறை,தனியார் துறைகளிடையே ஒருங்கிணைப்பு இல்லாததாகும். இவ்விரண்டு துறைகளும் வேறுபட்ட நோக்கங்களுடன் செயல்படுவதால் ஒருங்கிணைப்புத் தொடர்பான சிக்கல்கள் உருவாகின்றன.
- **போட்டி மனப்பான்மை :** அரசும், தனியார் துறைகளும் சமூகத்தின் நலனுக்காக இணைந்து செயலாற்றும் மனப்பான்மையுடன் இருக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. ஆனால் நடைமுறையில் இவ்விரண்டு துறைகளும் அவற்றின் நடவடிக்கைகளில் போட்டித் தன்மையுடனேயே நடந்து கொள்கின்றன.
- **திறமையின்மை :** மந்தமான அதிகாரமுறை, சிவப்பு நாடாமுறை, ஊக்கமின்மை ஆகியவற்றால் பொதுத்துறை நடவடிக்கைகளில் பெரும்பாலானவை திறனற்றவைகளாகவே இருக்கின்றன.
- **நாட்டுடைமையாக்கல் பற்றிய பயம் :** கலப்புப் பொருளாதாரத்தில் நாட்டுடைமையாக்கல் பற்றிய பயம் தனியார் துறைகளில் காணப்படுவதால், தனியார் தொழில் முனைவோர் தங்களுடைய வணிக நடவடிக்கைகளையும், புத்தாக்க முயற்சிகளையும் சுருக்கி விடுகின்றனர்.

www.surabooks.com

- **விரிவடையும் சமத்துவமின்மை :** வளங்களின் உரிமை, பரம்பரைச் சட்டங்கள், மக்களின் இலாப நோக்கம் ஆகியவை பணக்காரர், ஏழைகளிடையே இடைவெளியை விரிவடையச் செய்கின்றன.

**3. முதலாளித்துவத்தின் நன்மைகளை விளக்குக.**

விடை. **முதலாளித்துவத்தின் நன்மைகள் :**

- **தானாக இயங்குதல் :** முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அரசின் எந்தத் தலையீடும் இல்லாமல் பொருளாதாரம் தானாகவே செயல்படும்.
- **வளங்களைத் திறமையாகப் பயன்படுத்துதல்:** இப்பொருளாதாரத்தில் அனைத்து வளங்களும் திறமையாக சிறந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றன.
- **கடின உழைப்பிற்கு வெகுமதி :** கடின உழைப்பு ஊக்குவிக்கப்படுவதும், அதிக திறனால் தொழில் முனைவோர்கள் அதிக இலாபம் பெறுவதும் காணப்படும்.
- **பொருளாதார முன்னேற்றம் :** முதலாளித்துவ பொருளாதாரத்தில், உற்பத்தியும், உற்பத்தித்திறன் அளவும் மிக அதிகமாக இருக்கும்.
- **நுகர்வோர் இறையாண்மை :** அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் நுகர்வோரை மன நிறைவடையச் செய்வதை முக்கியமான நோக்கமாகக் கொண்டிருக்கின்றன.
- **மூலதன ஆக்க வீதம் அதிகரித்தல் :** சேமிப்பும், முதலீடும் அதிகரிக்கும். மூலதன ஆக்க வீதத்தை உயர்த்த வழி வகுக்கும்.
- **புதிய தொழில்நுட்ப முன்னேற்றம் :** இலாபம் பெறுவது நோக்கமாக இருப்பதால், உற்பத்தியாளர்கள் புதிய தொழில் நுட்பத்தில் முதலீடு செய்து, தரமான பண்டங்களை உற்பத்தி செய்வர்.

**4. முதலாளித்துவத்தின் குறைகளை விளக்குக.**

விடை. **முதலாளித்துவத்தின் குறைகள் :**

- **வருமானமும், செல்வச் செறிவும் :** முதலாளித்துவத்தில் வருமானம், செல்வம் ஆகியன சிலரது கைகளில் மட்டும் குவிகிறது. இதனால் வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கிறது.
- **வளங்கள் வீணாக்கப்படுதல் :** போட்டி விளம்பரங்களினாலும், நிகரொத்தப் பண்டங்களினாலும் வளங்கள் அதிக அளவில் வீணாக்கப்படுகின்றன.
- **வகுப்புப் போராட்டம் :** முதலாளித்துவமானது, சமுதாயத்தை முதலாளிகளாகவும், வேலைக்காரர் களாகவும் பிரிப்பதால் வகுப்புப் போராட்டத்திற்கு வழிவகுக்கிறது.
- **வணிகச் சுழல் :** தடையில்லாச் சந்தை முறை அதிக அளவில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் கொண்டு செல்கிறது.
- **அத்தியாவசியமில்லா பண்டங்களின் உற்பத்தி:** வாய்ப்பு இருக்குமாயின், இலாபத்தைப் பெறுவதற்காகத் தீங்கு விளைவிக்கும் பண்டங்கள் கூட உற்பத்தி செய்யப்படும்.

☆☆☆

www.surabooks.com

இயல்

# 2 நாட்டு வருமானம்


## பொருளடக்கம்


2.1 அறிமுகம்
2.2 நாட்டு வருமானத்தின் பொருள்
2.3 இலக்கணம்
2.4 நாட்டு வருமானத்தின் அடிப்படைக் கருத்துருக்கள்
  2.4.1 மொத்த உள்நாட்டு உற்பத்தி
  2.4.2 மொத்த நாட்டு உற்பத்தி
  2.4.3 அங்காடி விலையில் நிகர நாட்டு உற்பத்தி
  2.4.4 காரணி செலவில் நிகர நாட்டு உற்பத்தி
  2.4.5 தனிமனிதர் வருமானம்
  2.4.6 செலவிடக்கூடிய வருமானம்
  2.4.7 தலா வருமானம்
  2.4.8 உண்மை வருமானம்
  2.4.9 GDP. குறைப்பான்
2.5 நாட்டு வருமானத்தை அளவிடும் முறைகள்
  2.5.1 உற்பத்தி முறை
  2.5.2 வருமான முறை
  2.5.3 செலவு முறை
2.6 நாட்டு வருமான பகுத்தாய்வின் முக்கியத்துவம்
2.7 நாட்டு வருமானக் கணக்கீட்டில் உள்ள சிக்கல்கள்
  2.7.1 மாற்றுச் செலுத்துதல்கள்
  2.7.2 தேய்மானங்கள் கொடுப்பளவு மதிப்பிடுவதில் சிக்கல்
  2.7.3 பணம் செலுத்தப்படாத சேவைகள்
  2.7.4 சட்ட விரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம்
  2.7.5 சொந்த நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம்
  2.7.6 மூலதன இலாபம்
  2.7.7 புள்ளி விவர சிக்கல்
2.8 நாட்டு வருமானமும் மற்றும் சமூகக் கணக்கிடுதலும்
  2.8.1 சமூக கணக்கிடுலும் துறைகளும்
  2.8.2 நாட்டு வருமானமும் பொது நலனும்
  2.8.3 நாட்டு வருவாயும் நாட்டின் செல்வம் அரிக்கப்படுதலும்
  2.8.4 US$ அடிப்படையில் நாட்டு வருமானம்
  2.8.5 சமூகச் செலவும் சுற்றுச்சூழல் செலவும்




enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

www.surabooks.com


கருத்துப் படம்
நாட்டு வருமானம்
நாட்டு வருமானத்தை அளவிடும் முறைகள்
உற்பத்தி முறை
வருமான முறை
செலவு முறை
நாட்டு வருவாய்
மாற்று செலுத்தல்கள்
தேய்மானங்கள் கொடுப்பனவு மதிப்பிடுவதில் சிக்கல்
பணம் செலுத்தப்படாத சேவைகள்
மூலதன இலாபம்
புள்ளி விவர சிக்கல்
சட்ட விரோத நடவடிக்கையிலிருந்து பெறும்வருமானம்
சொந்த நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம்
இலக்கணம்
நாட்டு வருமான பகுத்தாய்வின் முக்கியத்துவம்
நாட்டு வருமானத்தின் பொருள்
அறிமுகம்
சமூக மற்றும் சுற்றுச்சூழல் செலவு
நாட்டு வருமானம் மற்றும் சமூக கணக்கிடுதல்
US$ அடிப்படையில் நாட்டு வருமானம்
நாட்டு வருவாயும் நாட்டின் செல்வம் அரிக்கப்படுதலும்
நாட்டு வருவாயும் பொது நலனும்
சமூக கணக்கிடுதல் மற்றும் துறைகள்
நாட்டு வருமானத்தின் அடிப்படை கருத்துக்கள்
மொத்த உள்நாட்டு உற்பத்தி
மொத்த நாட்டு உற்பத்தி
நிகர நாட்டு உற்பத்தி
தனிமனிதர் வருமானம்
GDP குறைப்பான்
உண்மை வருமானம்
தலா வருமானம்
காரணி செலவில் நிகர நாட்டு உற்பத்தி
செலவிடக்கூடிய வருமானம்

www.surabooks.com



## முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **நாட்டு வருமானத்தின் பொருள்** | : | நாட்டு வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள், பணிகளின் பண மதிப்பாகும். |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | : | ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிநிலைப் பண்டங்கள், பணிகளின் மொத்த அங்காடி மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆகும். |
| **மொத்த நாட்டு உற்பத்தி (GNP)** | : | மொத்த நாட்டு உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட வினை முடிவடைந்த பண்டங்கள், பணிகளின் அங்காடி மதிப்பில் கணக்கிடப்படுவது ஆகும். |
| **அங்காடி விலையில் நிகர நாட்டு உற்பத்தி (NNP at Market Prices)** | : | நிகர நாட்டு உற்பத்தி என்பது ஒரு ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும். |
| **காரணி செலவில் நிகர நாட்டு உற்பத்தி (NNP at Factor Cost)** | : | நிகர நாட்டு உற்பத்தி என்பது உற்பத்தியின் அங்காடி மதிப்பு ஆகும். காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும். |
| **தனிமனிதர் வருமானம் (Personal Income)** | : | தனிமனிதர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வாழும் ஒவ்வொரு தனி மனிதருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப் பெறும் மொத்த வருமானம் ஆகும். |
| **செலவிடக்கூடிய வருமானம் (Disposable Income)** | : | செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிமனிதர் செலவிடக்கூடிய வருமானத்தைக் குறிக்கிறது. தனிமனிதர் வருமானத்திலிருந்து நேர்முக வரிகளைக் கழித்தால் கிடைப்பது செலவிடக்கூடிய வருமானம் ஆகும். |
| **தலா வருமானம் (Per capita Income)** | : | தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வாழும் ஒருவரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும். |
| **உண்மை வருமானம் (Real Income)** | : | பண வருமானம் என்பது நாட்டு வருமானத்தை ஒரு ஆண்டின் உள்ள பொது விலை மட்டங்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. |
| **GDP குறைப்பான் (GDP Deflator)** | : | GDP குறைப்பான் என்பது GDP யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்றக் குறியீட்டெண் ஆகும். |
| **உற்பத்தி முறை (Product Method)** | : | உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியைக் கணக்கிடுவது ஆகும். இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது. |
| **வருமான முறை (Income Method)** | : | வருமான முறை என்பது நாட்டு வருமான கணக்கிடலைப் பகிர்வு பகுதியிலிருந்து அணுகுகிறது. |
| **செலவு முறை (Expenditure Method)** | : | ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவுகள் அனைத்தையும் கூட்டி நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது. |
| **சமூகக் கணக்கீடு (Social Accounts)** | : | பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதால் ஏற்படுகிற சமூகச் செலவுகளின் அடிப்படையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படும். |
| **ஊதியம் கொடுக்கப்படாத சேவைகள் (Unpaid Services)** | : | ஊதியம் பெறாமல் அளிக்கக்கூடிய பொருளாதார பலன்கொண்டிருக்கும் பணிகள் ஆகும். |
| **மூலதனத் துறை (Capital Sector)** | : | சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது மூலதனத்துறை ஆகும். |
| **மாற்று செலுத்துதல் (Transfer Payments)** | : | வேலையற்றோருக்கு அரசு அளிக்கும் உதவித்தொகை, முதியவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் போன்றவை. |

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

## இலக்கணங்கள்

| | | |
|---|---|---|
| **சாமுவேல்சனின் நாட்டு வருமான இலக்கணம்** | : | "பெரிய பிரச்சனைகளான வேலைவாய்ப்பின்மை, பணவீக்கம் மற்றும் வளர்ச்சி" ஆகியவற்றை சமாளிப்பதற்காக தயாரிக்கப்பட்ட தவிர்க்க முடியாத தயாரிப்பே நாட்டு வருமானம் என்று சாமுவேல்சன் கூறுகிறார். |
| **ஆல்ஃபிரட் மார்ஷலின் நாட்டு வருமான இலக்கணம்** | : | "ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்கின்றன. இதுவே அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், நாட்டு வருமானம் அல்லது நாட்டு ஈவுத்தொகை" என்று ஆல்ஃபிரட் மார்ஷல் கூறுகிறார். |
| **சைமன் குஸ்நட்ஸின் நாட்டு வருமான இலக்கணம்** | : | சைமன் குஸ்நட்ஸ் கூற்றுப்படி "ஓர் ஆண்டில் பொருளாதாரத்தின் உற்பத்தி அமைப்பில் இருந்து பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நிகர உற்பத்தியாக அவை இறுதி நிலை நுகர்வோரின் கைகளுக்குச் செல்கின்றன அல்லது அந்த நாட்டில் இருக்கக்கூடிய மூலதனப் பொருட்களின் இருப்போடு நிகர கூடுதலாகச் சேர்கிறது". |
| **இர்விங் பிஷ்ஷரின் நாட்டு வருமான இலக்கணம்** | : | "பண்டங்களிலிருந்தோ அல்லது சுற்றுப்புறச் சூழலிலிருந்தோ கடைசி நுகர்வோருக்கு கிடைக்கும் பணிகள் நாட்டு வருமான ஈவு அல்லது நாட்டு வருமானம் எனப்படும்". |
| **தலா வருமானத்தின் இலக்கணம்** | : | "தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும் உண்மையான தலா வருமானம் உயர்ந்தால் மக்களின் பொதுவான வாழ்க்கை தரம் உயர்ந்ததாக கருதப்படும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிலவற்றை சரிசெய்வதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது". |
| **GDP குறைப்பான் (GDP Deflator) இலக்கணம்** | : | "GDP குறைப்பான் என்பது GDP யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும்". |

## சூத்திரங்கள்

- மொத்த உள்நாட்டு உற்பத்தி – செலவு முறையைப் பயன்படுத்தி கணக்கிடும் சூத்திரம்.

  GDP = C + I + G + (X–M)

- நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = GDP – தேய்மானம்
- அங்காடி விலையில் (GNP) = அங்காடி விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்.
- நிகர நாட்டு உற்பத்தி (NNP) : NNP = GNP – தேய்மான கழிவு
- காரணி செலவில் (NNP) : காரணி செலவில் NNP = சந்தை விலையில் NNP – மறைமுக வரி + மானியம்
- தனிமனிதர் வருமானம் : தனிமனிதர் வருமானம் = நாட்டு வருமானம் – (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) + மாற்று செலுத்துதல்கள்

www.surabooks.com

www.surabooks.com



| | | |
|---|---|---|
| ✦ செலவிடக்கூடிய வருமானம் | : | செலவிடக்கூடிய வருமானம் = தனிமனிதர் வருமானம் – நேர்முகவரிகள் |
| ✦ தலா வருமானம் | : | தலா வருமானம் = $\frac{\text{ஒரு குறிப்பிட்ட ஆண்டின் நாட்டு வருமானம்}}{\text{அதே ஆண்டின் மக்கள் தொகை}}$ |
| ✦ உண்மை வருமானம் | : | நிலையான விலையில் உண்மை வருமானம் = நடப்பு விலையில் நாட்டு வருமானம் ÷ $P_1/P_0$ |
| ✦ GDP குறைப்பான் (GDP Deflator) | : | GDP குறைப்பான் = $\frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$ |
| ✦ நாட்டு வருவாயை அளவிடும் முறைகள் | : | உற்பத்தி = வருமானம் = செலவு |
| ✦ வருமான முறை | : | $Y = w + r + i + \pi + (R - P)$ |
| ✦ செலவுமுறை (Expenditure Method) | : | $GNP = C + I + G + (X - M)$ |
| ✦ சந்தை விலை (MP) | : | MP = காரணி செலவு (FC) – உதவித்தொகை |
| ✦ காரணி செலவு (FC) | : | காரணி செலவு = சந்தைவிலை – மறைமுகவரி + உதவித்தொகைகள் |
| ✦ உற்பத்தியின் மதிப்பு | : | உற்பத்தியின் மதிப்பு = விற்பனை + இருப்பில் மாற்றம் |
| ✦ இருப்பில் மாற்றம் | : | இருப்பில் மாற்றம் = முடிவு இருப்பு (Closing Stock) – தொடக்க இருப்பு (Opening Stock) |

## புத்தக வினாக்கள் மற்றும் விடைகள்

### மாதிரி வினாக்கள் – பகுதி - அ

**சரியான விடையை தெரிவு செய்க :**

**1. உற்பத்திக்காரணியின் செலவின் அடிப்படையிலான NNP** *[PTA-3]*

அ) நாட்டு வருமானம் ஆ) உள்நாட்டு வருமானம்
இ) தலை வீத வருமானம் ஈ) சம்பளம்

**விடை அ) நாட்டு வருமானம்**

**2. முதன்மைதுறை என்பது ________** *[HY-'19 & '23; PTA-6; Mar-2020]*

அ) தொழில் ஆ) வணிகம்
இ) வேளாண்மை ஈ) கட்டடம் கட்டுதல்

**விடை இ) வேளாண்மை**

**3. எத்தனை முறைகளால் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது?** *[QY-'19 & '23; Aug-'21; FRT & July-'22; June-'23]*

அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) நான்கு

**விடை ஆ) மூன்று**

**4. எவற்றைக் கூட்டி வருமான முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது?** *[FRT & July-'22; Mar-'24]*

அ) உற்பத்தி ஆ) வரி இ) செலவு ஈ) வருமானம்

**விடை ஈ) வருமானம்**

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

**5. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்ணாக இருக்கும்?**
அ) செலவிடக்கூடிய வருமானம்
ஆ) தனிமனிதர் வருமானம் இ) NNP
ஈ) GNP
விடை ஈ) GNP

**6. _______ துறையில் செலவு முறையில் நாட்டு வருமானம் மதிப்பிடப்படுகிறது.**
அ) கட்டடத்துறை
ஆ) வேளாண்மைத்துறை
இ) பணித்துறை ஈ) வங்கித்துறை
விடை அ) கட்டடத்துறை

**7. மூன்றாம் துறை _______ எனவும் அழைக்கப்படுகிறது.** *[PTA-1; Sep-2020; QY-'23]*
அ) பணிகள் ஆ) வருமானம்
இ) தொழில் ஈ) உற்பத்தி
விடை அ) பணிகள்

**8. ஒரு நாட்டின் _______ செயலை நாட்டு வருமானம் குறிப்பிடுகிறது.** *[PTA-5; FRT-'22]*
அ) தொழில் ஆ) விவசாயம்
இ) பொருளாதாரம் ஈ) நுகர்வு
விடை இ) பொருளாதாரம்

**9. _______ ஆல் நாட்டு வருமானத்தை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்.** *[PTA-3; Aug-'21; May-'22]*
அ) உற்பத்தி
ஆ) நாட்டின் மக்கள் தொகை
இ) செலவு ஈ) GNP
விடை ஆ) நாட்டின் மக்கள் தொகை

**10. GNP = _______ + வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம்.**
அ) NNP ஆ) NDP
இ) GDP
ஈ) தனிமனிதர் வருமானம் விடை இ) GDP

**11. NNP என்பது _______.** *[QY-'23]*
அ) Net National Product
ஆ) National Net Product
இ) National Net Provident
ஈ) Net National Provident
விடை அ) Net National Product

**12. மொத்த மதிப்பிலிருந்து _______ ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்.** *[Sep-2020; June-'23]*
அ) வருமானம் ஆ) தேய்மானம்
இ) செலவு
ஈ) வினை முடிவடைந்த பண்டங்களின் மதிப்பு
விடை ஆ) தேய்மானம்

**13. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது _______.** *[Govt. MQP -'19; HY-'19 & '23]*
அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31
ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30
இ) மார்ச் 1 முதல் மார்ச் 16
ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31
விடை அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31

**14. NNP யிலிருந்து வெளிநாட்டு காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு _______.** *[PTA-6]*
அ) மொத்த நாட்டு உற்பத்தி
ஆ) செலவிடக்கூடிய வருமானம்
இ) நிகர உள்நாட்டு உற்பத்தி
ஈ) தனிநபர் வருமானம்
விடை இ) நிகர உள்நாட்டு உற்பத்தி

**15. உற்பத்திப் புள்ளியில் NNP யின் மதிப்பு _______ என அழைக்கப்படுகிறது.** *[PTA-5]*
அ) காரணி செலவில் NNP
ஆ) அங்காடி விலையில் NNP
இ) காரணி செலவில் GNP
ஈ) தலைவீத வருமானம்
விடை அ) காரணி செலவில் NNP

**16. ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது _______** *[PTA-4]*
அ) தனிநபர் வருமானம்
ஆ) தலைவீத வருமானம்
இ) பணவீக்க வீதம்
ஈ) செலவிடக்கூடிய வருமானம்
விடை ஆ) தலைவீத வருமானம்

**17. பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட நாட்டு வருவாயின் மதிப்பு _______ என அழைக்கப்படுகிறது.**
அ) பணவீக்க வீதம்
ஆ) செலவிடக்கூடிய வருமானம்
இ) GNP
ஈ) உண்மை நாட்டு வருமானம்
விடை ஈ) உண்மை நாட்டு வருமானம்

**18. கீழ்வருவனவற்றுள் எது தடைபடா ஓட்டக் (Flow) கருத்துரு?**
அ) சட்டைகளின் எண்ணிக்கை
ஆ) மொத்த சொத்து
இ) மாத வருமானம்
ஈ) பண அளிப்பு
விடை இ) மாத வருமானம்

**19. PQLI என்பது ___ ன் குறியீடு ஆகும்.** *[Mar- '23]*

அ) பொருளாதார வளர்ச்சி
ஆ) பொருளாதார நலன்
இ) பொருளாதார முன்னேற்றம்
ஈ) பொருளாதார மேம்பாடு

**விடை ஆ) பொருளாதார நலன்**

**20. மிக அதிக அளவிலான நாட்டு வருமானம்_______ லிருந்து வருகிறது.** *[PTA-2]*

அ) தனியார் துறை
ஆ) உள்துறை
இ) பொதுத்துறை
ஈ) எதுவும் இல்லை

**விடை அ) தனியார் துறை**

## பகுதி - ஆ

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும் :**

**21. நாட்டு வருமானம் இலக்கணம் கூறுக.**
*[PTA-5; Mar-2020; June & HY-'23]*

**விடை.** "ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்கின்றன. இதுவே அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், நாட்டு வருமானம் அல்லது நாட்டு ஈவுத் தொகை ஆகும்." என்று ஆல்ஃபிரட் மார்ஷல் கூறுகிறார்.

**22. GNP கணக்கிடும் வாய்பாட்டை எழுதுக.**
*[QY-'19; Sep-2020; FRT & May-'22]*

**விடை.** அங்காடி விலையில் GNP என்பது C + I + G + (X – M) + (R–P)

| |
|---|
| அங்காடி விலையில் GNP = அங்காடி விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம். |

**23. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது?**

**விடை.**

| | NNP<br>நிகர நாட்டு உற்பத்தி | NDP<br>நிகர உள்நாட்டு உற்பத்தி |
|---|---|---|
| ■ | நிகர நாட்டு உற்பத்தி என்பது ஒரு ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும். | நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்த பிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி ஆகும். |
| ■ | NNP = GNP – தேய்மான கழிவு | நிகர உள்நாட்டு உற்பத்தி = GDP – தேய்மானம். |

**24. GNP க்கும் NNP க்கும் உள்ள தொடர்பினை எழுது.** *[PTA-2]*

**விடை. GNP :**

- மொத்த நாட்டு உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட வினை முடிவடைந்த பண்டங்கள், பணிகளின் அங்காடி மதிப்பில் கணக்கிடப்படுவது ஆகும்.
- இதில் நிகர வெளிநாட்டு வருமானமும் நிகர ஏற்றுமதி சேர்க்கப்படும்.

**NDP :**

- நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்த பிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி ஆகும்.
- தேய்மானத்தின் மதிப்பை GDP யிலிருந்து கழித்து விட்டால் கிடைப்பது NDP ஆகும்.

**25. தனிமனிதர் வருமானம் என்றால் என்ன?** *[Mar. & Sep-2020]*

**விடை.**

- தனிமனிதர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனிமனிதருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் ஆகும்.
- அவை வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம். இவை அனைத்தையும் ஒவ்வொரு தனிமனிதருக்கும் கூட்டினால் அது தனிமனிதர் வருமானம் ஆகும்.

**26. GDP குறைப்பான் இலக்கணம் தருக.**
*[Govt. MQP -'19; Aug-'21; FRT-'22; Mar & QY - '23]*

**விடை.** GDP குறைப்பான் என்பது GDP யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள், பணிகளின் விலை மாற்றக் குறியீட்டெண் ஆகும்.

இதுவும் ஒரு விலை குறியீட்டெண் ஆகும்.

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

**27. நாட்டு வருமானம் கணக்கீட்டில் "சொந்த நுகர்வு" எவ்வாறு சிக்கலைத் தருகிறது?** *[PTA-6; Mar-'24]*

**விடை. சொந்த நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் :**

- உழவர்கள் தங்களின் சொந்த நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். அங்காடியில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

- உற்பத்தி முறையில் நாட்டு வருமானம் கணக்கிடுதல் என்பது நடப்பு அங்காடி விலையில் வினை முடிவடைந்த பண்டங்களின், பணிகளின் மதிப்பை அளவிடுதல் ஆகும்.
- பொருளியல் அறிஞர்கள் நுகர்வோர் விலை குறியீட்டெண்ணைப் பயன்படுத்தி நிலையான விலையில் உண்மை நாட்டு வருமானத்தை கணக்கிடுகின்றனர்.

## பகுதி – இ

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும் :**

**28. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.** *[QY-'19 & '23; Sep-2020; FRT & May-'22; June-'23]*

விடை.
- தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வாழும் ஒருவரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.
- நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{ஒரு குறிப்பிட்ட ஆண்டின் நாட்டு வருமானம்}}{\text{அதே ஆண்டின் மக்கள் தொகை}}$$

**29. தனிமனிதர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?**

விடை. *[PTA-5; Mar-'24]*

| | தனிமனிதர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|---|
| ■ | தனிமனிதர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப் பெறும் மொத்த வருமானம் ஆகும். | செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிமனிதர் செலவிடக்கூடிய வருமானத்தைக் குறிக்கிறது. |
| ■ | வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம். இவை அனைத்தையும் ஒவ்வொரு தனிமனிதருக்கும் கூட்டினால் அது தனிமனிதர் வருமானம் ஆகும். | இந்த வருமானம் தான் தனிமனிதர்கள் நுகர்வுக்காக செலவிடக்கூடிய பண அளவு ஆகும். |
| ■ | **சூத்திரம் :** தனிமனிதர் வருமானம் = நாட்டு வருமானம் – (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) + மாற்று செலுத்துதல்கள். | **சூத்திரம் :** செலவிடக்கூடிய வருமானம் = தனிமனிதர் வருமானம் – நேர்முக வரிகள். |

**30. காரணி செலவில் NNP - குறிப்பு தருக.** *[Mar & HY - '23]*

விடை.
- நிகர நாட்டு உற்பத்தி என்பது உற்பத்தியின் அங்காடி மதிப்பு ஆகும்.
- காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும்.
- காரணி செலவில் நிகர நாட்டு வருமானத்தை பெறுவதற்கு, அங்காடி விலையில் NNP யின் பண மதிப்பிலிருந்து மறைமுக வரியைக் கழிக்க வேண்டும். மேலும் மானியங்களைக் கூட்ட வேண்டும்.
- காரணிசெலவில் NNP = சந்தை விலையில் NNP – மறைமுகவரி + மானியம்.

**31. செலவுமுறை பற்றி ஒரு சிறு குறிப்பு தருக.** *[HY-'19; PTA-3; FRT & July-'22; QY-'23]*

விடை. **செலவு முறை :** செலவு முறையில், ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவுகள் அனைத்தையும் கூட்டி நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.

- தனிமனிதரின் சொந்த நுகர்வுச் செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டு பொருள் வாங்கும் செலவு, நிகர ஏற்றுமதி முதலான அனைத்துச் செலவுகளையும் கூட்டி செலவு முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.
- மொத்தச் செலவும் கீழ்க்காணும் முறையில் சமன்பாட்டின் மூலம் கணக்கிடப்படுகிறது.

  GNP = C + I + G + (X – M)

  C - தனியார் நுகர்வுச் செலவு



www.surabooks.com

I - தனியார் முதலீட்டுச் செலவு
G - அரசின் கொள்முதல் செலவு
X – M - நிகர ஏற்றுமதி

**32. நாட்டு வருமானம் கணக்கிடுதலில் "இருமுறை கணக்கீட்டுச் சிக்கலுக்கு என்ன தீர்வு"?**

விடை. **இருமுறை கணக்கெடுப்பு :** *[QY-'19; PTA-6]*

- ஒரே பண்டம் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் இருக்கிறது.
- இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பண்டம் மூலப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ இருந்தால் அப்பொருளின் உற்பத்தியை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.
- சொந்த நுகர்வுக்குப் பயன்படுத்தப்பட்ட பண்டங்களின் மதிப்பையும் நாட்டு வருமானம் கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- இரண்டாம் முறையாக கைமாற்றப்பட்ட நீடித்த பொருள்களை வாங்குதல், விற்றல் நடவடிக்கைகளின் பணமதிப்பை நாட்டு வருமானத்தில் சேர்க்கக் கூடாது.

**33. நாட்டு வருமானம், பொதுநலன் ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக எழுதுக.**

விடை. **நாட்டு வருமானமும் பொது நலனும் :**

- ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார அந்தஸ்தும் அந்நாட்டின் நாட்டு வருமானத்தைப் பொறுத்தே அமைகிறது.
- GDP யில் தலைவீத வருமானம், அதன் ஆண்டு வளர்ச்சி வீதம் அடிப்படையில் நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் அளவிடப்படுகிறது.
- அதிக தலைவீத வருமானம் உடைய நாடு, நல்ல வாழ்க்கைத்தரத்துடன் அதிக பொருளாதார நலனையும் பெற்றதாக இருக்கும்.

**பொது நலன் :**

- நுகர்வுப் பண்டங்களைக் காட்டிலும் மூலதனப் பண்டங்கள் அதிகமாக இருந்தால், பொருளாதார நலனின் முன்னேற்றம் குறைவாக இருக்கும்.
- இயற்கை வளங்களான காற்று, நீர், மண் ஆகியவற்றை மாசுபடுத்தி அதிகமான GDPயை பெற்றால் பொருளாதார நலன் குறையும்.
- இராணுவ தளவாடங்கள் உற்பத்தி அதிகரிப்பதினால் நாட்டு உற்பத்தி அதிகரித்தாலும் பொருளாதார நலன் குறையும்.
- பெண்களுக்கு வேலைவாய்ப்பைத் தருதல், உழைப்பாளர்களை அதிக நேரம் வேலை செய்ய வைத்தல் முதலானவற்றின் மூலமாக தலைவீத வருமானத்தை அதிகரிக்கலாம்.

**34. நாட்டு வருமானத்தைக் கணக்கிடுதலின் பயன்களைப் பட்டியலிடுக.**

*[Govt. MQP -'19]*

விடை. **நாட்டு வருமானத்தைக் கணக்கிடுதலின் பயன்கள் :**

- ஒரு நாட்டின் பொருளாதார செயல்திறன் அல்லது உற்பத்தி செயல்திறனை நாட்டு வருமானம் விளக்குகிறது. பொருளாதார வல்லுநர்கள், திட்டமிடுபவர்கள், அரசு, வணிகர்கள், IMF, உலக வங்கி முதலான பன்னாட்டு நிறுவனங்கள் நாட்டு வருமானம் பற்றிய புள்ளி விவரத்தைப் பயன்படுத்துகின்றன.
- நாட்டின் பல்வேறு நோக்கங்களுக்காக இந்தப் புள்ளி விவரங்களைப் பகுத்தாய்வு செய்கின்றன.
- மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளதா என்பதைக் கண்டறிய நாட்டு வருமானம் உதவுகிறது.
- மேலும் பிற நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவும் நாட்டு வருமானம் பற்றிய புள்ளி விவரம் பயன்படுகிறது.
- ஒரு நாட்டின் வளர்ச்சியின் அளவைக் கணக்கிட நாட்டு வருமானம் பயன்படுத்தப்படுகின்றது.

## பகுதி – ஈ

## கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக.

**35. நாட்டு வருமானத்தின் முக்கியத்துவத்தை விவரி.**

*[Govt. MQP -'19; PTA-5; Mar-2020; Sep-2020; HY-'23; Mar-'24]*

விடை. **நாட்டு வருமானத்தின் முக்கியத்துவம் :**

- நாட்டு வருமானம் கணக்கீட்டின் மூலம், பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் நாட்டு வருமானத்தில் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது.
- நாட்டளவிலான பணவியல் கொள்கைகள், பொது நிதிக் கொள்கைகள் ஆகியவற்றை உருவாக்கவும், பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்லவும் கடைப்பிடிக்க வேண்டிய சரியான வழிமுறைகளைக் கையாளவும் நாட்டு வருமானம் ஆய்வு உதவுகிறது.
- திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு மற்றும் நுகர்ச்சியின் அளவு ஆகிய புள்ளி விவரங்களை நாட்டு வருமானம் கணக்கீடு அளிக்கின்றது.
- குறுகிய கால, நீண்ட கால பொருளாதார மாதிரிகளை உருவாக்க நாட்டு வருமானம் கணக்கீடு பயன்படுகிறது.

www.surabooks.com

- துறைவாரியான பொருளாதார விவரங்களையும், ஒரு நாட்டில் வட்டாரங்களின் வருமானத்தை ஒப்பிடவும், மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும், நாட்டு வருமானம் விவரங்கள் பயன்படுகின்றன.
- நாட்டு வருமானம் மூலம் தலா வருமானம் கணக்கிடப்படுகிறது.
- ஒரு நாட்டில் இருக்கும் பல்வேறு உற்பத்தி காரணிகளுக்கான வருமானப் பகிர்வை தெரிந்துகொள்ள நாட்டு வருமானம் பயன்படுகிறது.
- பேரியல் பொருளாதாரக் காரணிகளான வரி – GDP விகிதம், நடப்புக் கணக்கு பற்றாக்குறை – GDP விகிதம், நிதிப்பற்றாக்குறை – GDP விகிதம், கடன் – GDP விகிதம் ஆகியவற்றைக் கண்டறிய உதவுகிறது.

**36. நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.** *[QY-'19 & '23; PTA-1; Aug-'21; FRT & July-'22; Mar - '23]*

**விடை.** நாட்டு வருமானத்தை மூன்று முறைகளைப் பயன்படுத்தி அளவிடலாம். அவை,

- உற்பத்தி அல்லது மதிப்புக் கூடுதல் முறை.
- வருமானம் அல்லது காரணிகளின் ஊதிய முறை மற்றும் செலவு முறை.

**உற்பத்தி முறை :**

- உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியைக் கணக்கிடுவது ஆகும். இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது.
- ஒரு துறையின் வெளியிடு பொருள் மற்றொரு துறையின் உள்ளிடு பொருளாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இருமுறை அல்லது பல முறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது.
- இதற்கு இருமுறைக் கணக்கிடல் எனப் பெயர். இதனைத் தவிர்க்க வினை முடிந்தப் பண்டங்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**வருமான முறை :**

- வருமான முறை என்பது நாட்டு வருமான கணக்கிடலைப் பகிர்வு பகுதியிலிருந்து அணுகுகிறது.
- உற்பத்தி நிலைகளில் உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங் களையும் கூட்டி நாட்டு வருமானத்தைக் கணக்கிடலாம்.
- வருமான முறையானது, காரணிகள் ஈட்டும் வருமான முறை எனவும் அழைக்கப்படுகிறது.

**செலவு முறை :**

- இம்முறையில் ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவுகள் அனைத்தையும் கூட்டி நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.
- தனிமனிதரின் சொந்த நுகர்வுச் செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டுப் பொருள் வாங்கும் செலவு, நிகர ஏற்றுமதி முதலான அனைத்துச் செலவுகளையும் கூட்டி செலவு முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.

$$GNP = C + I + G + (X - M)$$

**37. நாட்டு வருமானம் கணக்கீட்டில் உள்ள சிக்கல்கள் யாவை?** *[HY-'19; PTA-2, 6; June & QY-'23]*

**விடை.** நாட்டு வருமானம் கணக்கீடு செய்யும் போது இந்தியாவின் சிறப்பு இயல்புகளை மனதில் கொள்ள வேண்டும். சில சிக்கல்கள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**சிக்கல்கள் :**

**மாற்றுச் செலுத்துதல்கள் :**

- ஓய்வூதியம், வேலையின்மைக்கான உதவித்தொகை, மானியங்கள் முதலானவற்றை அரசு அளிக்கிறது.
- இவை அரசின் செலவுகள் ஆகும். ஆனால் இவற்றை நாட்டு வருவாயில் சேர்ப்பதில்லை.

**தேய்மானங்கள் கொடுப்பளவு மதிப்பிடுவதில் சிக்கல் :**

- தேய்மானம் கொடுப்பளவு, விபத்து, இழப்பீடு, பழுதுக் கட்டணங்கள் முதலானவற்றை நாட்டு வருவாயிலிருந்து கழிப்பது என்பது மிக எளிதானது அல்ல.
- இவைகளை அதிக கவனத்துடன் சரியாக மதிப்பீடு செய்து கழிக்க வேண்டும்.

**பணம் செலுத்தப்படாத சேவைகள்:**

- இந்தியாவில் அதிகமான பெண்கள் வீட்டிலேயே அதிக வேலை செய்கின்றனர்.
- உணவு தயாரித்தல், தையல், பழுது பார்த்தல், துவைத்தல், சுத்தம் செய்தல், குழந்தைகளை வளர்த்தல் முதலான வேலைகளையும் எவ்வித பண வருமானமும் இன்றியும், நட்பு, பாசம்,

அன்பு, மரியாதை ஆகிய பணத்தால் மதிப்பிட முடியாத காரணங்களுக்காகவும் வேலை செய்கிறார்கள்.

- ஆனால் அவர்களுடைய அர்ப்பணிப்பு நாட்டின் உற்பத்தியில் சேர்க்கப் படுவதில்லை.

**சட்ட விரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம் :**

- சூதாட்டம், கடத்தல், சட்ட விரோதமாக மது தயாரித்தல் முதலிய சட்டவிரோத நடவடிக்கைகள் மூலம் பெறப்படும் வருமானம் நாட்டு வருமானத்தில் சேர்க்கப்படுவது இல்லை.
- இந்த நடவடிக்கைகள் மக்களின் விருப்பத்தை நிறைவு செய்தாலும் சமுதாய ரீதியில் உற்பத்தியைச் சார்ந்தது என்று எடுத்துக் கொள்ள முடியாது.

**சொந்த நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் :**

- உழவர்கள் தங்களின் சொந்த நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர்.
- அங்காடியில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

**மூலதன இலாபம் :**

- மூலதன சொத்துக்களான வீடு, பிற சொத்துக்கள், பங்குகள் முதலானவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபம் கிடைக்கிறது.

**புள்ளி விவர சிக்கல் :**

- புள்ளி விவரங்களைச் சேகரிப்பதில் பல சிக்கல்கள் உள்ளன.
- ஒரே விவரத்தை பல முறை கணக்கில் சேர்ப்பது, நம்பகத்தன்மை புள்ளி விவரங்கள் கிடைக்காமை, சேகரிப்பவர்களின் திறன் குறைவு,
- அர்ப்பணிப்பு இன்மை ஆகியவை நாட்டு வருமானம் கணக்கிடுதலில் சிக்கல்களைத் தரலாம்.

**38. பொருளாதார ஆய்வில், சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி.** *[PTA-3, 4]*

விடை. **சமூக கணக்கிடுதல் மற்றும் துறைகள் :** இம்முறையில் ஒரு நாட்டின் பொருளாதாரம் பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்படுகிறது. தனிமனிதர்கள் உள்ளடக்கிய ஒரு குழு அல்லது பல நிறுவனங்கள் சேர்ந்த ஒரு குழு முதலானவற்றுக்கு இடையே நடைபெறும் பொருளாதாரப் பரிமாற்றங்களை ஒரு துறை என்கிறோம். ஒரு நாட்டின் பொருளாதாரம் கீழ்க்காணும் துறைகளாகப் பிரிக்கப்படுகிறது.

**நிறுவனங்கள், குடும்பங்கள், அரசு, வெளிநாட்டு வணிகம், மூலதனத் துறை.**

- **நிறுவனங்கள் :** நிறுவனங்கள் உற்பத்திக் காரணிகளைப் பணியில் அமர்த்தி பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்கின்றன.
- **குடும்பங்கள் :** குடும்பங்கள் தங்கள் உழைப்பினை அளித்து கூலியைப் பெற்று, அதன் மூலம் பண்டங்கள், பணிகளை வாங்குகின்றன. அதாவது ஊதியத்தினைப் பெற்று பண்டங்களை வாங்குகின்றது. நிறுவனங்கள் குடும்பங்களின் பணியைப் பெற்று கூலியைத் தருகின்றன.
- **அரசு :** அரசுத் துறையில் பல நிலைகள் உள்ளன. கிராமம், வட்டம், மாவட்டம், மாநிலம், மத்திய அரசு என பல நிலைகள் உள்ளன. எடி மற்றும் பீகாக் கூற்றுப்படி, அரசு என்பது "ஒன்று சேர்க்கப்பட்ட மனிதர்கள்" எனக் குறிப்பிடுகின்றனர். வரி, தண்டனை, கட்டணம் மற்றும் கடன் ஆகியவை மூலமாக அரசு நிதியைத் திரட்டி பண்டங்களையும் பணிகளையும் வாங்குகிறது.
- **வெளிநாட்டு வணிகம் :** ஏற்றுமதி, இறக்குமதிகள் மூலம் கிடைக்கும் வருமானம், வெளிநாட்டுக் கடன்கள், வெளிநாட்டு மூலதன வருமானம், செலுத்துதல்கள் ஆகியவை வெளிநாட்டுத் துறையாகக் கருதப்படுகின்றன.
- **மூலதனத்துறை :** மூலதனத்துறை சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது. காப்பீட்டு நிறுவனம், வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பண பரிமாற்றங்கள் இதில் அடங்கும். GDPயில் துறைகளின் பங்கை மதிப்பிடுவதற்கு ஒரு நாட்டின் பொருளாதாரமானது முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் துறை எனப் பிரிக்கப்படுகிறது.

## பிடிஏ (PTA) தேர்வு வினா - விடைகள்

### 1 மதிப்பெண்

**1. கீழ்காண்பவற்றுள் சரியானதை குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதவும்.** *[PTA-4]*

| | | | |
|---|---|---|---|
| A) | உற்பத்தி முறை | i) | பொருளாதார முறை |
| B) | செலவு முறை | ii) | செலவின முறை |
| C) | வருமான முறை | iii) | காரணிகள் சம்பாதிக்கும் முறை |
| D) | PQLI | iv) | சரக்கு முறை |

குறியீடுகள் :

அ) A-(ii) B-(i) C-(iv) D-(iii)
ஆ) A-(iv) B-(ii) C-(iii) D-(i)
இ) A-(iii) B-(iv) C-(ii) D-(i)
ஈ) A-(i) B-(ii) C-(iv) D-(iii)

**விடை ஆ) A-(iv) B-(ii) C-(iii) D-(i)**

### 2 மதிப்பெண்கள்

**1. PQLI என்பதன் விரிவாக்கம் மற்றும் உட்கூறுகள் யாவை?** *[PTA-1]*

**விடை.** PQLI என்பதன் விரிவாக்கம் Physical Quality of Life Index. மக்களின் வாழ்க்கை தரம், வாழும் காலம் மற்றும் கல்வியறிவு ஆகியவை PQLI-ல் உள்ளடங்கி இருக்கிறது.

### 3 மதிப்பெண்கள்

**1. நாட்டு வருமானம் கணக்கீட்டில் உள்ள ஒரு சில புள்ளி விவர சிக்கல்களை பட்டியலிடுக.** *[PTA-2]*

**விடை.**
- வேளாண்மைத் துறையில் உற்பத்தி அளவைக் கணக்கிடுவது எளிதல்ல. மேலும் கால்நடைத்துறையின் உற்பத்தி பற்றிய புள்ளி விவரங்கள் சரியாகவும் முழுமையாகவும் கிடைக்காது.
- பல்வேறு மொழி, கலாச்சாரம் முதலான காரணத்தினாலும் புள்ளி விவரங்களை மதிப்பிடுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.
- அரசு அலுவலர்கள் - மக்கள் உறவு நம் நாட்டில் சுமூகமாக இல்லாத நிலையில் புள்ளி விவரங்கள் சேகரிப்பதில் சிக்கல்கள் வருகின்றன. மக்கள் உண்மையான புள்ளி விவரங்கள் தருவதில்லை.
- புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் பெரும்பான்மையான அலுவலர்கள் பயிற்சி அற்றவர்களாகவும், திறமையற்றவர்களாகவும் உள்ளனர்.
- ஆகையினால் நாட்டு வருமானம் மதிப்பீட்டில் துல்லியத் தன்மை இல்லாமலும், புள்ளி விவரங்கள் போதுமானதாக இல்லாமலும் இருக்கின்றன.

### 5 மதிப்பெண்கள்

**1. மொத்த நாட்டு உற்பத்தியில் அடங்கியுள்ள ஐந்து வகையான முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளைப் பற்றி குறிப்பு தருக.** *[PTA-4]*

**விடை.** GNP–ல் கீழ்க்காணும் ஐந்து வகையான வினை முடிவடைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் உள்ளன.

- ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பண்டங்கள், பணிகளின் மதிப்பு.
- இவை மக்களின் உடனடி நுகர்வுத் தேவையை நிறைவு செய்வதற்காக உற்பத்தி செய்யப்பட்டவை. இதனை நுகர்வு (Consumption : C) என்கிறோம்.
- மொத்த உள்நாட்டு மூலதனப் பொருட்களின் தனியார் முதலீடுகளில் இதில் மூலதனத் திரட்சி, வீடுகட்டுதல், உற்பத்திக்காக வைப்பில் உள்ள வினை முடிந்த, வினை முடியாத பண்டங்கள் ஆகியவை அடங்கும்.
- இதனை முதலீடு (I) எனக் குறிக்கிறோம்.
- அரசால் வாங்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகள் G எனக் குறிப்பிடப்படுகிறது.
- உள்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு செய்யப்பட்ட ஏற்றுமதியிலிருந்து (X) வெளிநாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட இறக்குமதியை (M) கழித்தால் கிடைக்கும் (X–M) நிகர ஏற்றுமதி.
- இது நேர் எண்ணாகவோ (+) எதிர்மறையாகவோ (-) இருக்கலாம்.
- நிகர வருமானம் என்பது வெளிநாடுகளில் இருந்து பெற்ற காரணிகளின் வருமானத்துக்கும் (கூலி, வட்டி, இலாபம்) நம் நாட்டில் குடியிருக்கும் வெளிநாட்டுகாரர்களுக்கு கொடுக்கப்பட்ட காரணிகளின் வருமானத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு (R – P) ஆகும்.
- அங்காடி விலையில் GNP என்பது C + I + G + (X–M) + (R–P).

| |
|---|
| அங்காடி விலையில் GNP = அங்காடி விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம். |